# TNPSC CSSE – I/ GROUP IV/ VAO/BANK/ PC 2013 வெற்றியாளர்கள்

1. M.RAVI - 00204263 (Gr. II)
2. N.MALARVIZHI - 00235030
3. PRASANNA DEVI - 00231249
4. N.RUBARANI - 00207060
5. T.LAKSHMI NARAYANAN - 00201069
6. K.SASIKALA - 00228086
7. N.ARTHI - 00236265
8. SIVASAKTHI - 03203029
9. MALINI - 11407178
10. V.S.ANITHA NIRMALA - 00206131
11. K.ARUL DANIEL - 99870027
12. N.SENTHILKUMAR - 00244268
13. D.SIVAKUMAR - 03213255
14. M.SUMATHI - 00214157
15. S.MAHESHWARI - 03208065
16. N.DEVI - 00214070
17. K.SUBHASHINI - 02908174
18. P.T.GANESH BABU - 00209167
19. V.SHANMUGA THILAK - 00257093
20. P.GANGARAJ - 00910037
21. S.NITHYA - 00201061
22. P.REKHA - 00205031
23. C.KIRUTHIKA - 00219172
24. S.VINOTH - 00206201
25. R.BALACHANDRAN - 00213150
26. G.LAVANYA - 03212016
27. B.RAJENDRAN - 01303060
28. R.SHANMUGA PRIYA - 00236010
29. K.CHINNAMUTHU - 17405238
30. H.SELVI - 00235096
31. GOVINDARAJ (GROUP II)
32. R.SIVA KUMAR (GROUP II)
33. S.KAVITHA (GROUP II)
34. V.SARANYA (GROUP II)
35. S.SENTHIL KUMAR (GROUP II)
36. K.SUDALAI PANDIAN (GROUP IV)
37. T.IYYAPPAN (GROUP IV)
38. S.DHANUSH (IBPS)
39. A.SATISH KUMAR (PO)
40. S.PRABHA SHANTHI (TYPIST)
41. R.MANIKA RAJ (SSC)
42. C.VENGATSH (IBPS)
43. PRAVIN KUMAR (RRB)
44. MURUGAN (PC)
45. VIGNESH KARTHIK (PC)
46. P. CHENTHUR PADIYAN (RRB)
47. ASHOK (SSC)
48. HARIHARAN (IBPS)
49. GANESWARI (GROUP IV ) & E.O
50. SURESH BABU (GROUP IV)
51. GOMATHY (PO)
52. SUJITHA (RBI)
53. KRITHIKA (PO)
54. MANOJ (RRB)
55. ANNAMALAI (GROUP II)
56. ARUL KUMAR (GROUP II)
57. SELVI (GROUP IV)
58. KUNASELAN (GROUP IV)
59. RAMESH (SFO)
60. ARUL (Tnpsc Group IV)
61. P.SENTHIL KUMAR (Group II)
62. KOMBAIAH RAMAN (GROUP II)

SHUNMUGAM IAS STUDY CIRCLE: Kovai / Nellai / Tirupur

SHUNMUGAM IAS STUDY CIRCLE H.O: Coimbatore -99941 46662 B.O: Tirunelveli- 95972 11166, Tirupur-99944 27714

### சந்தேலர்கள்

- பிரிதிகாரர்களின் ஆட்சியில் இருந்த பந்தல்கண்ட பகுதியை கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் தனியரசாக சந்தேலர்கள் அமைத்தனர். சந்தேலர்களின் மன்னன் யாசோதவர்மன் **"மகோபாவை"** தலைநகராக நிறுவினார். சந்தேலர்களின் கடைசி அரசர் பாரமால். இவரை கி.பி.1203 இல் குத்புத்தீன் ஐபக் தோற்கடித்தார். கலிஞ்சார் கோட்டை இவர்களது முக்கிய கோட்டையாகும். **கஜுராஹோவில்** பல அழகிய கோயில்களை இவர்கள் கட்டினார்கள். கந்தர்ய மகாதேவர் ஆலயம் (கி.பி. 1050) புகழ் பெற்றதாகும்.

### குகிலர்கள் அல்லது சிசோதியர்கள்

- சித்தூரை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து சிசோதிய மரபினைத் தொடங்கியவர் பாபாரவால். இவர் வழிவந்த இராணாரத்தசிங்கை கி.பி. 1307-ல் அலாவுதீன் கில்ஜி போரிட்டு தோற்கடித்தார். இதனை அறிந்த ராணாரத்தன் சிங் மனைவி இராணி பத்மினி **ஜவ்கர்** எனப்படும் வழக்கத்தின் படி தீயில் குதித்து இறந்தார்.

### பரமாரர்கள்

- பிரிதிகாரர்களின் ஆளுகைக்கு உட்பட்ட அரசர்களாக இருந்த பராமாரர்கள் கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் தம்மைச் சுதந்திர அரசாக அறிவித்துக் கொண்டனர். இவர்களது தலைநகரமாக **'தாரா'** விளங்கியது.இராஜா போஜ் (கி.பி.1018-1069) என்பவர் இம்மரபின் புகழ் மிக்க மன்னராவார். இவர் போபால் நகரின் அருகில் **அழகிய ஏரி** (250 சதுர மைல்) ஒன்றை அமைத்தார். தாராவில் சமஸ்கிருத கல்லூரி ஒன்றை நிறுவினார்.

### இராசபுத்திரர்களின் சிறப்பு இயல்புகள்

- இராசபுத்திரர்கள் வீரமிகுந்தவர்களாகவும், சிறந்த போர் வீரர்களாகவும் இருந்தனர். பெண்களையும், நலிந்தவர்களையும் காக்கும் குணம் படைத்தவர்களாகவும் இருந்தனர். பெண்கள் கற்பினை உயிராக மதித்து வாழ்ந்தார்கள். பெண்கள் கல்வி கற்றவர்களாக இருந்தனர். அவர்கள் சமூகத்தில் நல்ல மதிப்புடன் நடத்தப்பட்டார்கள். குழந்தை திருமணமும், பலதாரமணமும் நடைமுறையில் இருந்தது. எதிரிகளிடம் சிறைபட்டு களங்கம் ஏற்படுவதை விட இறப்பதை மேலாக கருதியதால் **ஜவகர்** முறையும், **உடன்கட்டை ஏறுதலும்** வழக்கில் இருந்தன.



### சமயம்

- இராசபுத்திரர்கள் இந்து மதத்தை போற்றி வளர்த்தனர். சமண சமயம், புத்த சமயம் ஆகியவைகளும் ஆதரிக்கப்பட்டன. பக்தி இயக்கம் இவர்கள் காலத்தில் மலரத் தொடங்கியது.

### அரசாங்கம்

- அரசு நிலமான்ய முறையினை அடிப்படையாக கொண்டு இருந்தது. நாட்டினை பல ஜாகிர்களாக பிரித்தனர். அதன் தலைவர்களான ஜாகிர்தார்கள், வரிவசூலித்து உரிய பங்கை மன்னரிடம் செலுத்தினர். ஜாகிர்தார்கள் படையை தனியே பராமரித்ததோடு மன்னருக்குத் தேவைப்படும் சமயத்தில் படையுதவியும் செய்தனர்.

### மொழியும் இலக்கியமும்

- இவர்களின் காலத்தில் மராத்தி, குஜராத்தி, வங்க மொழி போன்ற வட்டார மொழிகள் சிறப்பாக வளர்ச்சியடைந்தன. பக்தி இயக்கத்தினரும், நாட்டுப்புறப்பாடல்கள் பாடிய கலைஞர்களும் வட்டார மொழிக்கு வளர்ச்சிக்கு வழிக்கோலினார்கள்.

| ஆசிரியர் | இலக்கிய நூல் |
|---|---|
| கல்ஹனர் | இராஜதரங்கினி |
| ஜெயதேவர் | கீத கோவிந்தம் |
| சோமதேவர் | கதா சரித சாகரம் |
| சந்த் பரிதை | பிருத்திவிராஜ்ரசோ |
| பாஸ்காராச்சார்யா | சித்தார்த் சிரோமணி |
| இராசசேகரன் | கற்பூரமஞ்சரி, பாலஇராமயாணம் |

### கலை கட்டிடக் கலை

- இராசபுத்திரர்கள் காலத்தில் வண்ணச்சுவர் ஓவியங்களும், நுண் ஓவியங்களும் பிரபலமடைந்தன. **கஜீராஹோ** நகரின் ஆலயங்களும், புவனேஸ்வரத்தில் உள்ள **லிங்கராசா** கோயிலும், கோனார்க்கில் உள்ள **சூரியக்** கோயிலும், அபுமலையில் கட்டப்பட்டுள்ள **தில்வாரா** ஆலயமும், ஜெய்பூர், உதய்பூர் அரண்மனைகளும், சித்தூர், ஜோத்பூர், குவாலியர், ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கோட்டைகளும் ராசபுத்திரர்களின் கட்டிடக் கலைக்கு எடுத்துக் காட்டுகளாகும். தங்களுக்குள் தொடர்ந்து போரிட்டுக் கொண்டிருந்த இராசபுத்திர அரசுகளை அடக்கி, ஒருங்கிணைத்து, வெளிநாட்டவர் படையெடுப்புகளை முறியடிக்ககூடிய வலிமையான மைய அமைப்பு எதுவும் இல்லாத அரசியல் சூழலைப் பயன்படுத்தி, துருக்கியர்கள் தங்களின் ஆட்சியை இந்தியாவில் அமைத்தனர்.



SHUNMUGAM IAS STUDY CIRCLE H.O: Coimbatore -99941 46662 B.O: Tirunelveli- 95972 11166, Tirupur-99944 27714

7–ம் வகுப்பு

## 1. இராச புத்திரர்கள் காலம்

- ஹர்சர் மற்றும் இரண்டாம் புலிகேசி ஆகியோரின் ஆட்சியுடன் பண்டைய கால வரலாறு முடிவுறுகிறது. ஹர்சர் இறப்பு முதல், கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வரை பல்வேறு இராசபுத்திர வம்சத்தினர், வட இந்தியாவின் வரலாற்றை நிர்ணயித்தார்கள். 36 வகை இராசபுத்திரர்கள் வட இந்தியாவில் ஆட்சி செய்தார்கள்.

### அவர்களில் வலிமைப் பெற்ற இராசபுத்திரர்களாவன:

- அவந்தியை ஆட்சி செய்த **பிரிதிகாரர்கள்.**
- வங்காளத்தை ஆட்சி செய்த **பாலர்கள்.**
- டெல்லியை ஆட்சி செய்த **சௌகான்கள்.**
- டெல்லியை ஆட்சி செய்த **தோமர்கள்**
- கனோஜ் பகுதியை ஆட்சி செய்த **ரத்தோர்கள்.**
- மேவார் பகுதியை ஆட்சி செய்த **குகிலர்கள்.**
- பந்தல்கண்ட் பகுதியை ஆட்சி செய்த **சந்தேலர்.**
- மாளவத்தை ஆட்சி செய்த **பரமார்கள்.**
- வங்காளத்தை ஆட்சி செய்த **சேனர்கள்.**
- குஜராத்தை ஆட்சி செய்த **சோலங்கிகள்.**

### பிரிதிகாரர்கள் (கி.பி. 8–11 நூற்றாண்டு)

- பிரிதிகார மரபை தோற்றுவித்தவர் முதலாம் நாகபட்டர். இவரது தலைநகராக கன்னோஜ் விளங்கியது. பிரிதிகார மன்னர்களில் மிகவும் வலிமையுடன் விளங்கியவர் மகிரபோசர். இவர் சிந்துவின் ஜீனட முஸ்லீம்களின் படையெடுப்பை முற்றிலும் தடுத்தார். மகேந்திர பாலர் மகிரபோசரின் மகன் ஆவார். ஆற்றல்மிக்க அரசர்களில் மகேந்திர பாலர் ஒருவராவர். இவர் மகதம், வங்காளம் வடபகுதி ஆகிய இடங்களை வென்றார்.

- பிரிதிகாரர்களின் கடைசி மன்னர் இராஜ்யபாலா ஆவார். இவரது ஆட்சியில் பேரரசின் பரப்பளவு குறைந்து கனோஜ்வரை மட்டுமே இருந்தது. கி.பி 1018 ஆம் ஆண்டில் முகமது கஜினி, ராஜ்யபாலா மீது போர்தொடுத்தார். இப்போருக்கு பின் பிரிதிகாரர்கள் வீழ்ச்சியடைந்தார்கள். இவர்களின் ஆட்சியின் கீழ் இருந்த ரத்தோர்கள், சௌகான்கள், தோமர்கள், பரமாரர்கள், பாலர்கள் ஆகியோர் சுதந்திர அரசுகளாக செயல்படத் தொடங்கினார்கள்.

### பாலர்கள் (கி.பி.8–12 நூற்றாண்டு)

- (கி.பி.750–760) வரையிலான காலத்தில் வங்காளத்தில் குழப்பமான சூழல் நிலவியது. இதற்கு ஒரு முடிவு ஏற்படுத்தும் விதமாக பாலர் இனத்தலைவர்கள் ஒன்று கூடி கோபாலரை, வங்காளம் மற்றும் பீகார் முழுமைக்கும் மன்னராகத் தேர்ந்தெடுத்தனர். கோபாலர் (கி.பி.765-769), பாலர் மரபைத் தொடங்கினார். இவர் தமது நாட்டின் எல்லையை மகதம் வரை விரிவுபடுத்தினார். இவ்வரசகுலம் இந்தியாவின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதியையும் ஆட்சி செய்தது.

- கோபாலருக்கு பின் அவரின் மகன் தருமபாலர் (கி.பி.769–815) மன்னரானார். இவர் பிரிதிகாரர்களை வென்றதோடு கனோஜ், வங்காளம், பீகார் ஆகிய இடங்களைக் கைப்பற்றி, வட இந்தியா முழுவதையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார். பௌத்த மதத்தில் பற்று மிக்க தருமபாலர் பல பௌத்த மடங்களை கட்டினார். புகழ்மிக்க **விக்ரமசீலா பல்கலைக்கழகத்தை** நிறுவியதோடு **நாளந்தா பல்கலைக்கழகத்தையும்** புதுப்பித்தார். பாலரின் கடைசி அரசர் மகிபாலர் ஆவார். இவரது இறப்பிற்கு பின் பாலர் வம்சம் வலிமைக்குன்றியது.

### தோமர்கள்:

- கனோஜ் பகுதியில் இருந்த. பிரிதிகாரர்களிடம் திறை செலுத்திய அரசர்களாக இருந்தவர்களே தோமர்கள் ஆவர். பின்னர் தனியரசை ஏற்படுத்தி டெல்லி நகரை கி.பி. 736-ல் நிறுவினார்கள். கி.பி.1043-ல் மகிபால தோமர், தானேஸ்வரம், ஹான்சி, நாகர்கோட் ஆகிய இடங்களை வென்றார்.

### சௌகான்கள்:

- கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாளப் பகுதியை ஆண்ட பரமாரர்களிடமிருந்து உஜ்ஜயினியையும், தோமர்களிடமிருந்து டெல்லியையும் வென்றார். பின்னர் தம் தலைநகரை டெல்லிக்கு மாற்றிக் கொண்டனர். சௌகான் மன்னர்களில் மிக முக்கியமான மன்னர் **பிருத்திவிராஜ் சௌகான்** ஆவார்.

### ரத்தோர்கள்

- பிரிதிகாரர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் கனோஜ் பகுதியில் தெளிவற்ற சூழல் நிலவியது. இதனைப் பயன்படுத்தி ரத்தோர்கள் கனோஜ் அரசைக் கைப்பற்றினர். கி.பி. 1090 முதல் 1194 வரையில் ஆண்ட இவர்களில் **ஜெயசந்திரன்** என்பவரே புகழுடன் ஆட்சி செய்த கடைசி மன்னர் ஆவார். முகமது கோரியுடன கி.பி.1194–ல் நடந்த சந்தவார் போரில் இவர் கொல்லப்பட்டார்.

SHUNMUGAM IAS STUDY CIRCLE

- முதலாம் சந்திரகுப்தருக்குப் பின் பட்டத்திற்கு வந்த சமுத்திர குப்தரது (கி.பி.335-375) படையெடுப்பு வெற்றிகளைப் பற்றி அலகாபாத் கல்வெட்டு விரிவாகக் குறிப்பிடுகிறது. வங்காளத்திலிருந்து சிந்து நதி




வரையிலும் இமயமலையிலிருந்து விந்திய மலை வரையிலும் இப்பேரரசு விரிவாக்கப்பட்டது. அலகாபாத் கல்வெட்டைப் பொறிததவர் இவரது அமைச்சர் அரிசேனர் ஆவார். சமுத்திரகுப்தருக்கு பின் வந்த இரண்டாம சந்திரகுப்தர் (கி.பி.380-414) புகழ் பெற்ற அரசராகப் போற்றப்படுகிறார். இவர் அந்நியப்படையெடுப்பாளர்களான சாகர்களை வென்று, உஜ்ஜயினி நகரைக் கைப்பற்றிக் கொண்டார்.

- இராமாயணம், மகாபாரம் போன்றவையும் 18 புராணங்களும் தொகுக்கப்பட்டன. பஞ்சதந்திரக் கதைகள் இயற்றப்பட்டன. சமஸ்கிருத மொழியில் புலமை பெற்றவர்கள் இவர்களால் போற்றப்பட்டனர். காளிதாசர் - பாசர் - விசாகதத்தர் போன்ற புகழ்பெற்ற வட மொழிப் புலவர்கள் குப்தர்களால் போற்றப்பட்டனர். சமஸ்கிருத மொழி ஆட்சி மொழி ஆயிற்று. விஷ்ணு, சிவன், துர்க்கை போன்ற இந்துக் கட்டப்பட்டன. அஜந்தாவிலுள்ள சில பௌத்த குகைச்சிற்பங்கள், ஓவியங்களும் குப்தர் காலத்தவை.

- ஆர்யப்பட்டர் - வராகிமிகிரர் போன்ற புகழ் பெற்ற கணித-வானியல் அறிஞர்களும், சரகர், சுசுருதர், தன்வந்திரி முதலிய மருத்துவ அறிஞர்களும் குப்தர் காலத்தவர்களே. 1500 ஆண்டுகளாக துருப்பிடிக்காமல் இன்றும் பொலிவுடன் இருக்கும் மெகரௌலி இரும்புத்தூண் குப்தர் காலத்ததாகும். குமார குப்தர் காலத்தில் பௌத்தர்களது புகழ்பெற்ற நாளந்தா




பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. ஆனால் சமூக அமைப்பில் சாதிமுறை மிகக் கடுமையாயிற்று. அசோகர் காலத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டிருந்து உயிர்ப்பலி வேள்விகளுக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது. சிவன்- சக்தி- விஷ்ணு- குமரன் (முருகன்) வழிபாடுகள் பெருகின.

- குப்தர் காலம் பொற்காலம் எனக் கருதப்படுகிறது. புஷ்யமித்திரர், ஹீணர் போன்ற அந்நியர் படையெடுப்புகளால் குப்தப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. புகழ்பெற்ற சீனப் பயணி பாகியான், இரண்டாம் சந்திரகுப்தர் (விக்கிரமாதித்தயன்) காலத்தில் இந்தியாவின் பௌத்த தலங்களைக் காண வந்தார். சமுத்திரகுப்தர் (இந்திய நெப்போலியன் என்று அழைக்கப்பட்டார்).

## ஹர்சுஷப்பேரரசு

- குப்தர்கள் வீழ்ச்சிக்குப் பிறகு அந்நியர் (ஹீனர்) படையெடுப்புகளால் சீர்குலைந்திருந்த வட இந்தியாவில் மீண்டும் ஒரு பேரரசை உருவாக்கியவர். தானேஸ்வரத்தில் அரசர் ஹர்ஷவர்தனர் (கி.பி.606-கி.பி.647) ஆவார். ஹர்ஷர், தனது அண்ணனைக் கொன்ற சசாங்கனுடன் நீண்ட



காலம் போர் புரிந்தார். இதில் இவருக்குக் காமரூப (அசாம்) மன்னன் பாஸ்கரவர்மன் உதவி செய்தார். சசாங்கன் இறந்த பிறகு, வங்க அரசின் பெரும் பகுதியைத் தன்னரசுடன் இணைத்துக் கொண்டார். அத்துடன், தனது தங்கை ராஜஸ்ரீயின் வேண்டுகோளுக்க இணங்க, கன்னோசிக்கும் மன்னர் ஆனார். இதற்குப் பின்னர், கன்னோசியே ஹர்ஷரது தலைநகராக விளங்கியது.

- தென்னிந்திய அரசர் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியிடம் ஹர்ஷர் போரில் தோற்றுப்போனார். பௌத்த துறவியாக மாறிய ராஜஸ்ரீ, சீன அறிஞர் **'யுவான் சுவாங்'** ஆகியவர்களால் ஹர்ஷர் பௌத்தத்தின்பால் ஈர்க்கப்பட்டார். கன்னோசியிலும், பிரயாகையிலும் இவர் மிகப்பெரிய அளவில் சமய மாநாடுகள் நடத்தினார். இவற்றில் பௌத்த அறிஞர்களுடன் பிறமத அறிஞர்களும் பெருமளவில் பங்கேற்றனர். தனது செல்வங்கள் அனைத்தையும், இம் மாநாடுகளின் இறுதியில், துறவிகளுக்கும், அறிஞர்களுக்கும், பொதுமக்களுக்கும் வாரி வழங்கினார் ஹர்ஷர்.

- நாளந்தா பல்கலைக்கழகம் ஹர்ஷரது ஆதரவால் உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகமாக வளர்ச்சி பெற்றது. இவரது அமைச்சரான பாணர் சமஸ்கிருத மொழி அறிஞராவார். இவர், **'ஹர்ஷசரிதம்'** என்னும் நூலை இயற்றியுள்ளார். ஹர்ஷர் **நாகானந்தம், ரத்னாவளி, பிரியதர்ஷிகா** என்னும் நூல்களை படைத்துள்ளார்.

- ஹர்ஷர் காலத்தில் சீன துறவி யுவான்சுவாங் **கன்னோசி, பிரயாகை, நாளந்தா, காஞ்சிபுரம்** உள்ளிட்ட பல இடங்களுக்கும் சென்றார்.



ஹர்ஷரது அரசவையிலும் சிறிது காலம் இருந்தார். இவர் எழுதிய **'சி-யு-கி'** என்னும் பயண நூல் அன்றைய இந்தியாவைப் பற்றியும், பௌத்த மதத்தை பற்றியும் பல செய்திகளைத் தருகின்றது. இசுலாமியர் படையெடுப்பிற்கு முன், வட இந்தியாவில் இருந்த கடைசிப் பேரரசு **ஹர்ஷரது** பேரரசாகும்.

SHUNMUGAM IAS STUDY CIRCLE

## அசோகர்:

- சந்திரகுப்த மௌரியருக்குப் பின், அவர் மகன் பிந்துசாரர் 25 ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவருக்கு பின் அவரது மகன்களில் ஒருவரான அசோகர் மௌரியப் பேரரசரானார். (கி.மு 273 – 236). மௌரியப்பேரரசிலிருந்து பிரிந்து சென்ற கலிங்கத்தின் மீது படையெடுத்து கடும் போருக்கு பின் கலிங்கத்தை மீண்டும் மௌரியப்பேரரசுடன் இணைத்தார். ஆனாலும் அப்போரில் அவர் கண்ட பேரழிவுக் காட்சிகள் அவரை மிகவும் கலங்கச் செய்தன. இனிப் போரிடுவதில்லை என்றும் உறுதி பூண்டார்.
- அசோகர் போர் செய்து வெற்றி பெறும் திக் விஜயத்தை வெறுத்தார். மக்களிடம் தர்மத்தை வளர்க்க இவர் மேற்கொண்ட இடைவிடாத பயணங்கள் **'தர்மவிஜயம்'** என்று குறிப்பிடப்படுகின்றன. சாதி மத பேதமின்றி அனைவருக்கும் சத்திரங்களையும், மருத்துவ மனைகளையும் கட்டினார். முதன் முதலில் **மக்கள் நல அரசை (Welfare State)** உருவாக்கிய பெருமை அசோகரையே சாரும். அசோகர் முயற்சியால் பௌத்த மதம் ஓர் உலக மதமாக மலர்ந்தது.

## அசோகரது கலைப்பணி

- அசோகர் காலத்தில் அமைக்கப்பட்ட சாஞ்சி, சாரநாத், லும்பினி போன்ற இடங்களில் காணப்படும் கலையழகு அம்சம் கொண்ட பிரம்மாண்டமான பௌத்த தூபிகள் காண்போரை வியக்க வைப்பவையாகும். அசோகரது பெரும்பாலான கல்வெட்டுகள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ளன. மௌரிய வம்சத்தின் கடைசி அரசரான பிருகத்திரதன் தன் படைத்தலைவர் புஷ்யமித்ர சுங்கனால் படுகொலை செய்யப்பட்டார். இதற்கு பின் ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுக்காலம் மகதம் வலுவிழந்து நின்றது.

## முக்கிய குறிப்புகள்

- பாடலிபுத்திரம் என்னும் கோட்டையை அமைத்தவர் அஜாதசத்ரு. மெகஸ்தனிஸ் எழுதிய நூல் இண்டிகா. அசோகர் அரியனை ஏறிய ஆண்டு கி.மு 273 மூன்றாவது பௌத்த மாநாடு நடைபெற்ற இடம் - பாடலிபுத்திரம்.

## பௌத்த மத மாநாடுகள்

| மாநாடு | இடம் | அரசர் | தலைமை |
|---|---|---|---|
| முதல் | ராஜகிருகம் | அஜாதசத்ரு | மகாகசபர் |
| இரண்டாவது | வைசாலி | காலசோகர் | சுபாகமி |
| மூன்றாவது | பாடலிபுத்திரம் | அசோகர் | புத்ததிஸா |
| நான்காவது | குந்தல்வனம் (காஷ்மீர்) | கனிஷ்கர் | வசுமித்திரர், அசுவகோசர் |

## குசஷான பேரரசு

- மௌரியர்களின் வீழ்ச்சிக்கு பின் இந்தியாவில் நிறுவப்பட்ட வலிமையான பேரரசு குஷான பேரரசு



ஆகும். யூச்சி என்ற இனக்குழுவின் ஓர் உட்பிரிவினரே **குஷானர்கள்.** இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் குஷான அரசை முதலாம் காட்பீஸஸ் கி.பி முதல் நூற்றாண்டில் நிறுவினார். இவருக்கு பின் வந்த இரண்டாம் காட்பீஸஸ் (கி.பி.65-75) பஞ்சாபையும், கங்கைச் சமவெளியையும் கைப்பற்றினார்.

## கனிஷ்கர்

- இரண்டாம் காட்பீஸஸ் இறந்த பின் கனிஷ்கர் **(கி.பி-78-101)** குஷான அரியணையைக் கைப்பற்றினார். கனிஷ்கர் குஷான வம்சத்தின் தலைசிறந்த மன்னராக விளங்கினார். கனிஷ்கர், **யார்கண்ட், கோடான்** ஆகிய மத்திய ஆசியப் பகுதிகளைத் தன் பேரரசுடன் இணைத்தார். **புருஷபுரம்** என்ற பெஷாவரைப் புதுநகராக உருவாக்கித் தன் தலைநகராக ஆக்கினார்.
- பின்னர் பௌத்த மதத்தில் ஈடுபாடு கொண்டார். **4-வது** புத்த மாநாட்டினை காஷ்மீரில் கூட்டினார். இதில் புகழ்பெற்ற அறிஞர்களான வசுமித்திரர், அசுவகோசர், நாகர்ஜீனர் போன்றோர் பங்கேற்றனர். இம் மாநாட்டில் தான் **மகாயான** பௌத்த மதப்பிரிவு தோன்றியது.
- பௌத்த மதத்தின் மீது அவருக்கு இருந்த ஈடுபாட்டாலும், பௌத்த மதத்தைப் பரப்ப அவர் மேற்கொண்ட முயற்சிகளாலும் இவர் **'இரண்டாம் அசோகர்'** என்று அழைக்கப்பட்டார். கனிஷ்கர் பதவிக்கு வந்த ஆண்டினை முதன்மையாக வைத்து **சக சகாப்தம்** என்னும் புதிய காலக்கணக்கீட்டு முறை உருவாயிற்று. **'அசுவகோஷர்'** வட மொழியில் எழுதிய புத்தகம் **'புத்தசரிதம்'** & **'சூத்திராலங்காரம்'. வசுமித்திரர்** தொகுத்த சாஸ்திர நூல் **'மகாவிபாஷம்'** என்பதாகும்.

## குப்தப்பேரரசு:

- குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்கு பிறகு மகத்தில் பாடாலிபுத்திரத்தை கொண்டு உருவான பேரரசு



குப்தப் பேரரசு ஆகும்.குப்தவம்சத்தின் முதல் சுதந்திர மன்னராக முதலாம் சந்திரகுப்தர் (கி.பி.319-335) குறிப்பிடப்படுகிறார். இவரது ஆட்சியின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் குப்தயுகம் என்ற காலக்கணக்கீடு புகுத்தப்பட்டது.

SHUNMUGAM IAS STUDY CIRCLE

- சமண முனிவர்கள் இயற்றியவை – சிலப்பதிகாரம், நன்னூல், சீவகசிந்தாமணி, வளையாபதி. மணிமேகலையும், குண்டலகேசியும் பௌத்த நூல்கள். திரிபிடகம் வினய பிடகம், சுத்த பிடகம், அபிதம்ம பிடகம் என்ற மூன்று உட்பிரிவுகளை கொண்டது. பௌத்த சமயத் துறவிகளின் **பிரார்த்தனைக் கூடங்கள், சைத்தியங்கள்** என்றும் **மடாலயங்கள்** என்றும் விகாரங்கள் என்றும் அழைக்கப்படுகிறது. பௌத்த துறவிகளின் அமைப்பு சங்கம் ஆகும். ஹீனயானம் புத்தரின் கொள்கைளை ஏற்றுக் கொண்டவர்கள். உருவ வழிபாடு செய்யாதவர்கள். மகாயானம் புத்தரை தெய்வமாக ஏற்றுக் கொண்டவர்கள் உருவ வழிபாடு செய்பவர்கள்.

## 6. பேரரசுகளின் தோற்றம்

- வேத காலத்தின் இறுதியில், புதிய வளமான விளைச்சல் நிலங்களுக்காகவும், கனிமவளங்களுக் காகவும் சிறு சிறு ஆரிய அரசுகளான ஜனபதங்கள் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டன. அதே நோக்கத் திற்காகக் கிழக்கு நோக்கி முன்னேறவும் முற்பட்டனர்.இதனால், கங்கைச் சமவெளியின் கிழக்கிலும், தெற்கிலும் இருந்து வந்த ஆரியரல்லாத இனப்பிரிவு களுடன் மோதல்கள் ஏற்பட்டன. இப்போராட்டங்களினால் சிறிய ஜனபதங்கள் போர்களில் தோற்கடிக்கப்பட்டதாலோ, தாமாகவே முன் வந்ததாலோ பெரும் மகா ஜனபதங்கள் இணைந்தன. பல ஜன பதங்களை உள்ளடக்கிய பெரிய **"மகாஜனபதங்கள்"** உருவாக்கப்பட்டன. இவற்றில் கோசலம், அவந்தி, வத்சம், மகதம் போன்றவை பரம்பரை மன்னராட்சி மகாஜனபதங்களில் வலிமையானவை.

### மகாஜனபதங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1.அங்கம் | 2.அவந்தி | 3.அஸ்மகம் | 4.மல்லம் |
| 5.மத்ஸ்யம் | 6.மகதம் | 7.காந்தாரம் | 8.காசி |
| 9.காம்போஜம் | 10.சேதி | 11.கோசலம் | 12.குரு |
| 13.வஜ்ஜி | 14.வத்சம் | 15.சூரசேனம் | 16.பாஞ்சாலம் |




### பிம்பிசாரர் – அஜாதசத்ரு

- இன்றுள்ள பீகார் மாநிலத்தின் பாட்னாவைச் சுற்றியுள்ள பகுதி **"மகதம்"** என்று அழைக்கப்பட்டது. அதன் தலைநகராக முதலில் **'சிராவஸ்தி'** நகரமும், இறுதியாகப் **'பாடலிபுத்திரம்'** என்னும் நகரமும் இருந்தன. அரியங்க வம்சத்தை சேர்ந்த பிம்பிசாரர் மிகச் சிறிய அரசாக இருந்த மகதத்தை படையெடுப்புகள் மூலம் பெரிய அரசாக மாற்றினார். இவரது மகன் அஜாதசத்ரு மகாஜனபதங்களுடன் நீண்ட காலம் போர் செய்து வெற்றி பெற்று பல பகுதிகளை மகதத்துடன் இணைத்தார். பாடலிபுத்திரத்தில் பெரிய கோட்டையை அமைத்தவர் அஜாதசத்ரு ஆவார்.

### சிசுநாகன் – மகாபத்மநந்தன்

- அரியங்க வம்சத்தை வீழ்த்தி, சிசுநாகர் ஆட்சியைப் பிடித்தார். சிசுநாகர்களுக்குப் பின் நந்தவம்சத்தினர் ஆட்சிக்கு வந்தனர். இவர்கள் மகதத்தின் ஆட்சியை வட இந்தியா முழுவதும் பரப்பினர். நந்த வம்சத்துப் பேரரசர்கள் சமண மதத்தைப் போற்றுபவர்களாக இருந்தனர்.

## மௌரியப் பேரரசு

### சந்திரகுப்த மௌரியர் (கி.மு.324–299)

- நந்தமன்னரான தனநந்தனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, போரில் வென்று மகதப்பேரரசை மௌரியவம்சத்தைச் சேர்ந்த சந்திரகுப்தர் கைப்பற்றி ஆண்டார். அலெக்ஸாண்டர் தலைமையில் கிரேக்கர்களால் முன்னர் கைப்பற்றப்பட்டிருந்த மேற்கிந்தியப் பகுதிகளை வென்று மௌரியப் பேரரசுடன் இணைத்தார். இதனை எதிர்த்து படையெடுத்து வந்த **செலூகஸ் நிகேடர்** என்ற கிரேக்க மன்னனையும் தோற்கடித்து ஆப்கானிஸ்தானையும், காந்தாரம் போன்ற பகுதிகளையும் தமது பேரரசுடன் இணைத்துக் கொண்டார்.



- செலூகஸ் தூதவரான **மெகஸ்தனிஸ்** இந்தியாவை பற்றி **'இண்டிகா'** என்னும் நூலை எழுதினார். கடைசியில் சந்திரகுப்த மௌரியர் சமண மதத்தைத் தழுவித் துறவியாகி அரியணையைத் துறந்து சமண முனிவர் பத்திரபாகு என்பவருடன் தென் இந்தியாவிற்குச் சென்று அங்கு **சரவணபெலகொலா** பகுதியில் சமண மத நம்பிக்கையின் படி தவமிருந்து உயிர் நீத்தார் எனவும் கூறப்படுகிறது.

SHUNMUGAM IAS STUDY CIRCLE

| சமண கோயில்கள், சிற்பங்கள் காணப்படும் இடங்கள். | கோயில்கள் | சிற்பங்கள் |
|---|---|---|
| | ரனக்பூர் | உதயகிரி |
| | தில்வாரா | ஹாதிகும்பா |
| | சித்தூர் | கிர்னார் |
| | கஜுராஹோ | சிரவணபெலகொலா |
| | | கழுகு மலை |

## பௌத்த சமயம்

- பௌத்த மதத்தை தோற்றுவித்தவர் சித்தார்த்தர் எனும் கௌதம புத்தர் ஆவார். இவர் வாழ்ந்த காலம் கி.மு563 முதல் கி.மு 483 வரையாகும். இன்றைய நேபாள நாட்டில் உள்ள கபிலவஸ்து என்னும் ஊரில் பிறந்தார். இவரது தந்தை சாக்கியக் குலத்தை சேர்ந்த சுத்தோதனர், தாய் மாயாதேவி. சித்தார்த்தர் பிறந்த ஏழாவது நாளில் அவரது தாய் இறந்து விட்டார். பின்னர் சித்தார்த்தர் தன் சிற்றன்னையால் வளர்க்கப்பட்டார். தனது 16 வயதில் யசோதரையை மணந்தார்: இராகுலன் என்ற ஆண் மகவைப் பெற்றார்.
- ஒரு பக்கம் செல்வச் செழிப்பு, மறுபக்கம் வறுமை, நோயால் பாதிக்கப்பட்டவர்கள், முதுமையால் தள்ளாடுபவர்கள் என்று அவர் கண்ட காட்சிகள் அவர் மனத்தில் பல கேள்விகளை எழுப்பின. மனைவி, தாய்-தந்தை என அனைத்து உறவுகளையும் துறந்தார். காட்டிற்கு சென்று தவம் செய்தார்.
- 'அறிவுணர்வு' பெற்ற சித்தார்த்தர் 'புத்தர்' ஆனார். அவர் 'அறிவுணர்வு' பெற்ற இடம் கயாவில் உள்ள அரச மரத்தடியாகும். 'புத்தர்' என்ற சொல்லின் பொருள் 'நல்லது எது, கெட்டது எது என்பதை அறிந்து கொண்டவர்' என்பது ஆகும். புத்தர் தனது முதல் போதனையை **வாரணாசி** (உத்திரப்பிரதேசம்) அருகே சாரநாத்தில் உள்ள **மான்பூங்கா**வில் தொடங்கினார்.

## புத்தரின் கோட்பாடுகள்:

- துன்பங்களை பற்றிப் புத்தர் கூறிய அறிவுரைகள், 'நான்கு பேருண்மைகள்' என்றும், ஒழுக்க நெறிகள் பற்றி அவர் போதித்தவை 'எண் வகை நெறிகள்' என்றும் அழைக்கப்படுகின்றன.

## நான்கு பேருண்மைகள்

1.உலகம் துன்பமயமானது.

2.துன்பத்திற்கு காரணம் ஆசையே.

3.ஆசையை ஒழித்தால் துன்பத்திலிருந்து விடுபடலாம்

4.ஆசையை ஒழிக்க எட்டு நெறிகள்

## ஆசையை ஒழிப்பதற்கான எட்டு நெறிகள்

- நல்ல நம்பிக்கை
- நல்ல பேச்சு
- நல்ல வாழும் வழி
- நல்ல சிந்தனை
- நல்ல முயற்சி
- நல்ல நடத்தை
- நல்ல செயல்
- நல்ல தியானம்



- சமண மதத்தை போல, பௌத்த மதத்தையும் அரசர்கள் பலர் பின்பற்றினர். அவர்களில் பலர் பின்பற்றினர். அவர்களில் முக்கியமானவர் அசோகர் ஆவார். கி.மு 6ஆம் நூற்றாண்டுவரை சமண, பௌத்த மதங்கள் செல்வாக்குடன் பரவலாக பின்பற்றப்பட்டன.
- மீண்டும் வேத, வைதீக, வருணாசிரம மதம் செல்வாக்குப் பெறத் தொடங்கியதால் பிற்காலத்தில் சமண, பௌத்த மதங்களின் செல்வாக்கு மங்கத் தொடங்கின. அசோகர், கனிஷ்கர், ஹர்சர் ஆகியோர் பௌத்த மதத்தை ஆதரித்த அரசர்கள். கனிஷ்கர் காலத்தில் பௌத்த மதம் ஹீனயானம், மகாயானம் என இரண்டாக பிரிந்தது.

இலங்கை, பர்மா, திபெத், சீனா, ஜப்பான் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் இன்றளவும் பௌத்த மதம் பின்பற்றப்படுகிறது.

## முக்கிய குறிப்புகள்:

- பௌத்த விகாரங்கள் மிகுந்த மாநிலம் பீகார். பௌத்த சமய வரலாற்றை ஜாதகக் கதைகள் விளக்குகின்றன. புத்தர் அறிவுணர்வு பெற்ற இடம் புத்த கயா. கயா, சாஞ்சி, பர்கட் ஆகிய இடங்களில் புத்தர் காலத்தின் பல படைப்புகள் காணப்படுகின்றன. ஆஜந்தா குகை ஓவியங்களும், எல்லோரா சிற்பங்களும் (மகாராட்டிரா மாநிலத்தின் ஔரங்காபாத் மாவட்டம்) காந்தாராக் கலை சிற்பங்களும் புத்த சமயத்தை சார்ந்தவை சமண மதத்துக்கு உறுதியான அமைப்பைத் தந்தவர் வர்தமான மகாவீரர். சமண சமய மிகவும் வலியுறுத்திய கொள்கை கொல்லாமை.தமிழ்நாட்டின் சமணச் சிற்பங்கள் காணப்படும் இடங்களுள் ஒன்று **கழுகுமலை. வட்டக் காமினி அபயன்** என்னும் அரசன் காலத்தில்தான் திரிபீடகம் முதன் முதலில் நூல் வடிவில் எழுதப்பட்டது.திரிபீடகம் என்பது மூன்று கூடை என்று பொருள். சமணர்களின் புனித நூல்கள் - **அங்கங்கள், பூர்வங்கள்** ஆகும்.

SHUNMUGAM IAS STUDY CIRCLE

| வ.எண் | கூறுகள் | திராவிடம் நாகரிகம் | ஆர்ய நாகரிகம் |
|---|---|---|---|
| 1. | தோற்றம் | இருண்ட நிறம், நடுத்தரமான உயரம், கருமையான தலைமுடி | வெள்ளை நிறமும், உயரமான உருவம், செம்பட்டையான தலைமுடி |
| 2. | வணிகம் | வாணிகம், பயிர்த்தொழில் | கால்நடை வளர்ப்பு, போர் புரிதல் |
| 3. | உடை | பருத்தி ஆடை | கம்பளி, பருத்தி, விலங்கு தோல் |
| 4. | வழிபடும் விலங்கு | எருதுகளை வழிபட்டனர் | பசுக்களை வழிபட்டனர் |
| 5. | வழிபாடு | கோயில் வழிபாடு, சிலை, லிங்கம், சூலம், சக்தி, நாகம் | யாகம் செய்தல், இந்திரன், அக்னி, வருணன் |
| 6. | உலோகம் | செம்பு உலோகத்தை பயன்படுத்தினார் | இரும்பை அறிந்தனர் |
| 7. | அறியாதது | குதிரையை அறியார் | புலியை அறியார் |

## 5.சமணமும் பௌத்தமும்

- கி.மு 6-ஆம் நூற்றாண்டு உலகின் சிந்தனைப் புரட்சிக் காலமாகும். அக்காலத்தில்தான் இந்தியாவில் சமண மதமும் பௌத்தமதமும் தோன்றின. இவ்விரு மதங்களும் சமய, சமூகச் சீர்திருத்த இயக்கங்களாக உருவெடுத்தன. சமண மதத்தை உருவாக்கியவர் மகாவீரர். பௌத்த மதக் கருத்துக்களை வழங்கியர் கௌதம புத்தர்.

### சமண சமயம்:

- சமண மதத்தினரால் 24 தீர்த்தங்கரர்கள் வழிபடப்படுகின்றனர். முதல் தீர்த்தங்கரர் ஆதிநாதர் எனப்படும் ரிஷபதேவர் ஆவார். இவ்வரிசையில் இறுதியாக 24ஆவதாக வந்தவர் வர்ததமான மகாவீரர். இவர் சமண சமயத்துக்கு உறுதியான ஓர் அமைப்பை தந்தார். வர்தமான மகாவீரரின் காலம் கி.மு.534 முதல் கி.மு.462 வரையாகும்.
- இவர் இன்றைய பீகார் மாநிலத்தில் வைசாலி நகருக்கு அருகிலுள்ள குந்தக்கிராமம் என்னும் ஊரில் பிறந்தார். இவரது தந்தை பெயர் சித்தார்த்தர்: தாயின் பெயர் திரிசலை. இவருக்கு யசோதா என்ற மனைவியும், அனோஜா பிரியதர்சனா என்ற மகளும் இருந்தனர். வர்தமானர் தனது 30 வயதில் இல்வாழ்க்கையைப் புறந்தள்ளி முற்றிலும் ஒதுக்கி விட்டுத் துறவியானார். அன்றைய காலக்கட்டத்தில் நிலவிய பல்வேறு பிரச்சனைகளுக்கு விடை தேடி 12 ஆண்டுகள் கடுமையான தியானத்தில் ஆழ்ந்தார். இவர் ஜீனர் என்று அழைக்கப்பட்டார். மக்கள் இவரை மகாவீரர் என்று அழைத்தனர்.



### வர்தமானார் போதித்த மும்மணிகள்

நல்லறிவு | நன்னம்பிக்கை | நன்னடத்தை

### ஐந்து ஒழுக்கங்கள்

1. ஊறு செய்யாமை
2. பொய்யாமை
3. களவாமை
4. உடைமை மறுத்தல்
5. புலனடக்கம்

### சமண சமயத்தை பின்பற்றிய அரசர்கள்

**சந்திரகுப்த மௌரியர், கலிங்கத்து காரவேலன், கூன் பாண்டியன், முதலாம் மகேந்திர பல்வலர்**

### சமணர்களின் தமிழ் இலக்கிய படைப்புகள்:

- சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, வளையாபதி, சூளாமணி முதலிய காப்பியங்களும், யாப்பருங்கால காரிகை, நேமிநாதம், நன்னூல், யாப்பருங்கால விருத்தி, அகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம் போன்ற இலக்கண நூல்களையும், நிகண்டு களையும், நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி, திணைமாலை நூற்றைம்பது முதலிய அறநூல் களையும், இயற்றிச் சமணர்கள் தமிழுக்குத் தொண்டாற்றியுள்ளனர். கோமதீஸ்வரர் ஆலயம் கர்நாடக மாநிலத்தில் சிரவணபெலகொலாவில் உள்ளது.




SHUNMUGAM IAS STUDY CIRCLE

- அரசின் எல்லைகள் விரிந்ததால் அரசின் அதிகாரங்களும் அதிகரித்தன. அரச பதவி பரம்பரை பதவியானது. தனது நாட்டை எதிரிகளிடமிருந்து காத்துச் சட்டம் ஒழுங்கை பராமரிப்பது ராஜாவின் கடமையாக இருந்தது. இக்காலத்தில் முக்கிய அரசாட்சி பகுதியாக கங்கை சமவெளி திகழ்ந்தது. இப்பகுதியில் **கோசலம், காசி, விதேகம், குரு, பாஞ்சாலம், மகதம், அவந்தி** போன்ற அரசுகள் தோன்றின

### சமூக வாழ்க்கை



- இக்காலத்தில் சாதி அமைப்பு முறை தோன்றி வலுப்பட்டது. இது வருண தர்மம் என்று அழைக்கப்பட்டது. யாகம் மற்றும் புரோகிதம் செய்வோர் பிராமணர்கள் எனப்பட்டனர். உயிரைப் பணயம் வைத்துப் போர்புரிந்து நாட்டைக் காப்பவர்களும், ஆள்பவர்களும் சத்திரியர்கள் எனப்பட்டனர். பயிர்த்தொழிலும், வாணிகமும் செய்வோர் வைசியர்கள் எனப்பட்டனர். இம்மூன்று பிரிவினருக்கும் குற்றேவல் செய்வோர் சூத்திரர்கள் எனப்பட்டனர்.

### பொருளாதார நிலை

- இரும்பு அதிக அளவில் பயன்படுத்தப்பட்டது. இதனால், கைத்தொழில்கள் மேம்பட்டன. புதிய கருவிகள் தயாரிக்கப்பட்டன. நெல், கரும்பு சாகுபடிக்குச் சாண உரமிடும் முறை தோன்றியது. கம்பு, பார்லி, கோதுமை பயிரிடப்பட்டன. கால்நடை வளர்ப்பு பெருகியது. ஒருவரிடம் இருந்த கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொருத்து, அவரது செல்வ நிலை மதிப்பிடப்பட்டுள்ளது. நெசவாளர்கள், தோல் தொழிலாளர்கள், தச்சர்கள், நகை செய்வோர் முதலிய தொழிலாளர்கள் இருந்தனர். **நிஷ்கா, சுவர்ணா, சதமானா** முதலான தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன

### பெண்களின் நிலை:

- பிற்பட்ட வேதகாலத்தில், மகளிர் நிலையில் முன்னேற்றம் காணப்படவில்லை. ஆண்களுக்க கீழ் படிந்தவர்களாகவே பெண்கள் நடத்தப்பட்டார்கள். அவர்களுக்கு சொத்துரிமை இல்லை. ஆளும் சபைகளில் பங்கெடுத்துக் கொள்ளும் அரசியல் உரிமைகளையும் இழந்தனர். குழந்தைத் திருமணம் பரவலாக வழக்கத்திற்கு வந்தது. கணவன் இறந்தால் மனைவி **உடன்கட்டை** ஏறும் வழக்கம் நடைமுறையில் இருந்தது.

- அரச குடும்பப் பெண்கள் மட்டும் சில உரிமைகளைப் பெற்றிருந்தனர். கல்வியில் சிறந்து விளங்கிய போன்ற பெண்கள் கல்வியல் சிறந்து விளங்கினர். குருகுலங்களில் மாணவர்கள் தத்துவம், தர்க்கசாஸ்திரம், சமயம், இலக்கணம், வானவியல், மருத்துவம், ஒழுக்கவியல், கணிதம், வேதங்கள், உபநிடதங்கள், இலக்கண நியதி போன்ற பாடங்களைப் பயின்றனர். அரசு குமாரர்களுக்குத் தனுர்வேதம் எனப்படும் போர்க்கலை கற்பிக்கப்பட்டது.

### சமயம்:



- வருண முறைப்படி பிராமண குருமார்களால் சமயத்துறையில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. முற்பட்ட வேதகாலக் கடவுள்களின் முக்கியத்துவம் குறைந்தது. இக்காலத்தில் பிரம்மன், ருத்ரன் (சிவன்), விஷ்ணு ஆகியோர் முக்கியத்துவம் பெற்றனர். வழிபாட்டில் யாகங்களும், சடங்குகளும் அதிகரித்தன. உயிர்ப்பலியிடுதலும், கடவுளை வணங்கும் வழிபாட்டு முறைகளும் முக்கியத்துவம் பெற்றன. மக்கள் ஆன்மா, வினைப்பயன், மோட்சம் போன்றவற்றில் நம்பிக்கை கொண்டிருந்தனர். இக்காலத்தில் இறுதியில் புரோகிதர்களின் ஆதிக்கத்துக்கும், யாகம், உயிர்ப்பலி போன்ற சடங்குகளும் கடுமையான எதிர்ப்புகள் தோன்றின. இதன் காரணமாக இதற்கு எதிராகத் தோன்றியவையே உயிர்களைக் காத்திடும் உணர்வை வளர்த்த பௌத்த, சமண சமயங்கள் எனலாம்.

### மதிப்பீடுகள்:


- ரிக் வேதகால காலம் - கி.மு 1500 –கி.மு 1000. ரிக் வேதகால வாணிகத்தில் பயன்படுத்தப்பட்ட தங்க நாணய அலகு – நிஷ்கா.பின் வேத காலத்தில் சிறந்து விளங்கிய பெண் - கார்கி. கிராமத்தின் தலைவர் கிராமணி. முற்பட்ட வேத காலத்தில் விதவைகள் திருமணம் அனுமதிக்கப்பட்டது. கிராம மக்களின் பிரிதிநிதிகளைக் கொண்ட அவை சமிதி.பிற்பட்ட வேத காலத்தில் கணவன் இறந்தால் மனைவி **உடன்கட்டை** ஏறும் வழக்கம் நடைமுறையில் இருந்தது. **சமிதி**– ஊர்மக்களின் பிரிதிநிதிகளை கொண்ட அவை ஆகும்.




SHUNMUGAM IAS STUDY CIRCLE

SHUNMUGAM IAS STUDY CIRCLE H.O: Coimbatore -99941 46662 B.O: Tirunelveli- 95972 11166, Tirupur-99944 27714

## ஆரியர்கள் சமூக, சமுதாய அமைப்பு




## அரசியல்:

- சமுதாயத்தின் அடிப்படை அலகு குடும்பம். பல குடும்பங்கள் இணைந்தது கிராமம். கிராமத்தின் தலைவர் கிராமணி. பல கிராமங்கள் இணைந்து விசு(விஸ்) என்ற பெரிய குழுவானது. இதன் தலைவர் விசுவபதி. பெரிய ஆட்சி அமைப்பு ஜனா. இதன் தலைவர் ராஜன் (அரசன்). வீரமும் விலிமையும் மிக்கவனே ராஜன் ஆனான். ராஜ்யத்தில் வாழ்ந்த மக்கள் பிரஜைகள் எனப்பட்டனர். அரசர் பிராஜாபதி என்றும் அழைக்கப்பட்டார். அரசப்பதவி பரம்பரை உரிமையாகக் கருதப்பட்டது.

- மகாஜனபதம் என்பது பல சிற்றரசுகள் இணைந்த பெரிய அரசு ஆகும். ராஜாவிற்கு நிருவாகத்தில் உதவி செய்ய புரோகிதர், சேனானி (படைத் தலைவர்) போன்ற அதிகாரிகளும், சபா, சமிதி போன்ற அமைப்புகளும் இருந்தன. **சபா** – முதியோர் அவை. **சமிதி**– ஊர்மக்களின் பிரிதிநிதிகளை கொண்ட அவை.

## சமூக வாழ்க்கை

- குடும்பத்தின் தலைவன் தந்தை. தொடக்கத்தில் ஆண்களுக்க இணையாகப் பெண்களும் கல்வி கற்றனர். அவர்கள் ஆன்மீகம் போன்றவற்றில் திறம் பெற்று விளங்கினர்.**விஸ்வவாரா, அபலா, கோசா. லோபமுத்ரா** போன்ற பெண் கவிஞர்களும் இருந்தனர். முதலில் சாதிப்பிரிவுகள் தோன்றவில்லை. ஒரு தார மணம், பலதாரமணம் ஆகியவை நடைமுறையில் இருந்தன. விதவைகள் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

## பொருளாதார நிலை

- ரிக் வேத கால மக்கள் கால்நடை வளர்ப்பையும், வேளாண்மையையும் முக்கியத் . தொழில்களாகக் கொண்டனர். இரும்பின் பயனை நன்கு அறிந்ததால் பல கருவிகள் செய்து,காடுகளைத் திருத்தி விளை நிலங்களாக்கினர். பண்டமாற்று முறை வழக்கத்திலிருந்தது. **"நிஷ்கா"** என்ற தங்க அலகுகள் வாணிகத்தில் பயன்படுத்தப்பட்டன.

## உணவு:

- வேத கால மக்கள் கோதுமை, பார்லி, பால், தயிர், நெய், காய்கறிகள், பழங்கள், இறைச்சி போன்றவற்றை உணவாகக் கொண்டனர். சுரா பானங்களைப் பருகினர்.

## உடை மற்றும் அணிகலன்கள்:

- பருத்தி, கம்பளி உடைகளை உடுத்தினர். ஆண்கள் வேட்டி, சால்வை போன்ற உடைகளை உடுத்தினர். தலைப்பாகை அணிவது வழக்கத்திலிருந்தது. பெண்கள் உள்ளாடை, இடுப்பில் அணியும் மேலாடை போன்ற உடைகளையும் உடுத்தினர். ஆண்களும், பெண்களும் அணிகலன்களை அணிந்தனர். காது வளையம், கழுத்து மாலை, கை வளையல், காற் சிலம்பு, தலையில் கட்டும் பட்டை போன்றவற்றை அணிந்தனர்.

## சமயம்:

- இயற்கையையும், அதன் சக்திகளையும் வணங்கினர். சூரியன், நெருப்பு, காற்று, வானம், மரங்கள் ஆகியவற்றை வணங்கினர். இந்திரன், வருணன், அக்னி, எமன், ஆகிய கடவுள்களை வணங்கினர். கோயில்களோ, சிலை வழிபாடோ முந்தைய வேதகாலத்தில் இல்லை. ஆரியர்கள் யாகங்களையும், சமயச் சடங்குகளையும் செய்தனர். பின்னர் சமயம் சார்ந்த கருத்துகளும், விளக்கங்களும் தத்துவங்களாக இயற்றப்பட்டன. அவர்கள் நடத்திய யாகத்தீயில் பால், நெய், தானியம், பட்டு ஆகியவற்றையும் இட்டனர். அஸ்வமேதம், இராஜசூயம், வாஜ்பேயம் ஆகிய யாகங்கள் நடத்தப்பட்டன.

## பிற்பட்ட வேதகாலம்

**(கி.மு 1000 - கி.மு 600)**

- ரிக் வேத காலத்திற்குப் பின்னர் யஜீர், சாம, அதர்வண வேதங்களின் காலத்தைப் பிற்பட்ட வேதகாலம் எனலாம். இக்காலத்தில் ஆரியர்கள் கிழக்கு நோக்கி பரவி இருந்தனர். இக்காலத்தில் விரிவான அரசுகள் எழுச்சி பெற்றன. **பிராமணங்கள், உபநிடதங்கள், ஆரண்யகங்கள்** சார்ந்த கருத்துகளும் விளக்கங்களும் இயற்றப்பட்டன.

## அரசியல்:

- இராஜசூயம், அஸ்வமேதம் போன்ற யாகங்கள் மன்னரின் பேராதிக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் செய்யப்பட்டன. வேள்விகள் அதிகரித்தன. சபா, சமிதி போன்ற அமைப்புகள் வலுவிழந்தன.

SHUNMUGAM IAS STUDY CIRCLE

### சங்க இலக்கியம்:

- தற்காலத்தில் சங்க இலக்கியம் எனக் கிடைத்துள்ள நூல்கள் எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் ஆகும். கடைச்சங்க காலத்திற்கு முன்னரே தமிழின் பெருமைக்கு அடையாளமாக அரும்பெரும் இலக்கணமான தொல்காப்பியம் தோன்றியுள்ளது. சங்க காலத்தில் தமிழ்ப்புலவர்கள் நிலத்தை ஐந்து இயற்கைப் பிரிவாகப் பிரித்து வழங்கினர். மலைகளும் அது சார்ந்த நிலமும் குறிஞ்சி எனப்பட்டது. காடுகளும் அது சார்ந்த நிலமும் முல்லை எனவும், கடலும் கடற்கரைப் பகுதியும் நெய்தல் எனப்பட்டது. நீர்வளத்துடன் வயல் சூழ்ந்த பகுதி மருதம் எனப்பட்டது. கடும் வறட்சிக்கு உள்ளாகித் திரிந்த நிலத்தைப் பாலை என வழங்கினர்.

### மூவேந்தர்கள்

- **பாண்டியர்:** பாண்டிய மரபில் வந்த மன்னர்களுள் பீடும் பெருமையும் வாய்ந்தவர்கள் சிலர். அவர்களுள் பாண்டியன் முடத்திருமாறனும், தன் மீது போர் தொடுத்த தமிழக அரசர் எழுவரை ஒரு சேர வென்ற **தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும்,** சிலப்பதிகாரத்தில் இடம் பெற்ற பெருமைக்குரியவர். **யானோ அரசன்? யானே கள்வன்?** என்று கூறி வளைந்த தன் செங்கோலை நிமிர்த்துமாறு உயிர் நீத்தவனமான பாண்டியன் நெடுஞ்செழியனும் குறிப்பிடத் தக்கவர்கள்.

- **சேரர்:** சேரர் மரபில் வந்தவருள் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சிலம்பு புகழ் சேரன் செங்குட்டுவன் முதலானோர் புகழ் ஓங்கியவர்கள். அவ்விருவருமே வடக்கில் இமயம் வரை சென்று வெற்றிக்கொடி நாட்டியவர்கள் என்று கூறப்படுகின்றது.

- **சோழர்:** சோழ மரபில் வந்தவர்களுள் - கரிகாற் பெருவளத்தான், கிள்ளிவளவன் ஆகியோர் புகழ்மிக்கவர். 2000 ஆண்டுகட்கு முற்பட்ட சோழமன்னன் கரிகாலன், அவன் தனது ஆட்சிக் காலத்தில், ஈழத்தை வென்று, அந்நாட்டவரைக் கைதிகளாகக் கொண்டு வந்து, அவர்களைக் கொண்டு காவிரி நதிக்குக் கரை **(கல்லணை)** கட்டினான். இடைக்காலத்தில் வாழ்ந்த இராசராசசோழன், இராசேந்திர சோழன் ஆகியோரும் பெரும் புகழ் பெற்றவர் ஆவர். அவர்கள் வட புலத்தை மட்டுமின்றி **ஜாவா, கடாரம்** முதலான கீழ்த்திசை நாடுகளையும் வென்றனர். குறுநில மன்னராக விளங்கிய எழுவர், கடையெழுவள்ளல்கள் எனப்பட்டனர். பாரி, ஓரி, காரி, நள்ளி, எழினி, பேகன், ஆய் ஆகியோர் அத்தகு புகழ்வாய்ந்தவர்களாவர்.



### மதிப்பீடுகள்:

- உலகிலேயே மிகத் தொன்மையானதென வரலாற்றிஞர்களால் கருதப்படுவது விந்திய மலைக்கு தெற்கிலுள்ள பகுதி. மனித இனம் முதன் முதலில் தோன்றியதாக கருதப்படும் இடம் லெமூரியா. திருவள்ளுவர் பிறந்த ஆண்டாகத் தமிழறிஞர்கள் கருதும் ஆண்டு கி.மு 31. இடைச்சங்கம் நடைபெற்ற நகரம் கபாடபுரம். தமிழ்ப்புலவர்கள் கூடி இலக்கிய ஆய்வு செய்த பண்டைத் தமிழக அமைப்பு சங்கம்.குமரிக்கண்ட மாந்தர்களின் வழிவழி வந்த இனப்பிரிவினரே தமிழர். கடைச்சங்க காலத்திற்கு முன்னரே தோன்றிய இலக்கண நூல் தொல்காப்பியம் தமிழ்நாட்டின் வரலாற்றுக் காலம் சங்க காலத்தில் தொடங்குகிறது. 2004 ஆம் ஆண்டு மைய அரசு **"தமிழ் ஒரு செம்மொழி"** என்று அறிவித்துள்ளது.

## 4. வேத காலம்

- ஆரியர்கள் மத்திய ஆசியப் பகுதியிலிருந்து கைபர், போலன் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் குடியேறியவர்கள். கால்நடைகளை மேய்க்கும் தொழில் செய்த ஆரியர், புதிய புதிய புல்வெளிகளை தேடிக் கொண்டு இடம் விட்டு இடம் பெயர்ந்தனர்.இந்தியாவில் அவர்கள் குடியேறிய பகுதி ஆரிய வர்த்தம் எனப்பட்டது. தங்கள் இனப்பெரியோர் பாடிய வேண்டுதல்களை வேதங்களாகத் தொகுத்தனர். வரலாற்றில் இக்காலகட்டம் வேதகாலம் என்று அழைக்கப்படுகிறது. வேதகாலம் **முற்பட்ட வேதகாலம், பிற்பட்ட வேதகாலம்** எனப் பிரித்து அறியப்படுகிறது.

### முற்பட்ட வேதகாலம் அல்லது ரிக் வேத காலம்

**(கி.மு. 1500 – கி.மு.1000)**

- ரிக் வேதம் தொகுத்த காலத்தில் ஆரியர்கள் பெரும்பாலும், இன்றைய பாகிஸ்தானில் உள்ள சிந்துப் பகுதியிலேயே வாழ்ந்தனர். அவர்கள் முதலில் பஞ்சாபில் இருந்த சப்த சிந்து எனப்பட்ட (ஏழு நதிகள் பாயும் நிலம்) பகுதியில் குடியேறினர். ரிக் வேதத்தின் வாயிலாக வேத கால மக்கள் வாழ்க்கை முறைகளை அறிய முடிகிறது.




SHUNMUGAM IAS STUDY CIRCLE

SHUNMUGAM IAS STUDY CIRCLE H.O: Coimbatore -99941 46662 B.O: Tirunelveli- 95972 11166, Tirupur-99944 27714

- ஏழை மக்கள் கிளிஞ்சல், தாமிரம் போன்றவற்றால் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்தனர். ஆண், பெண் இருபாலரும் பற்பல அணிகலன்களை அணிந்தனர்.சிந்து வெளி மக்கள் **டெராகோட்டா (TERRACOTTA)** எனப்படும் சுடுமண் பாண்டம் செய்வதில் திறமை மிக்கவர்களாக இருந்தனர். மொகஞ்சதாராவில் வெண்கலத்தால் ஆன நாட்டிய மங்கையின் உருவச் சிலை கண்டெடுக்கப்பட்டுள்ளது. மொகஞ்சதாராவில் கண்டு எடுக்கப்பட்ட பொருள்கள் அங்கு வாழ்ந்த மக்களின் சமயக் கோட்பாடுகளையும், சமயப்பற்றினையும் அறிவிக்கின்றன. பசுபதி என்ற சிவனையும், பெண் கடவுளையும், லிங்கம், சூலம், மரம் முதலியவற்றையும் வணங்கினர். இறந்தவர்களை புதைக்கும் போது அச்சடங்குகளுடன் உணவு, அணிகலன்களையும் சேர்த்துத் தாழிகளிலிட்டுப் புதைத்தனர்.

## மதிப்பீடுகள்

- சிந்து வெளி நாகரீகம் பற்றி அறிய உதவுவது அகழ்வாராய்ச்சியின் சான்றுகள் ஆகும்.



மொகஞ்சதாரோ என்பதன் பொருள் **இடுகாட்டு மேடு. லோத்தல்** என்னும் செம்புக் கற்காலத் துறைமுகம் காணப்படும் இடம் குஜராத்.ஹரப்பா நாகரிகம் நகர நாகரிகமசிந்துவெளி மக்களுக்குத் தெரிந்திராத உலோகம் இரும்பு. ஹரப்பா என்ற சிந்தி மொழிச் சொல்லின் பொருள் புதையுண்ட நகரம் ஹரப்பா மக்களின் முக்கியக் கடவுள் பசுபதி சிந்துவெளி அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்ட **ஆண்டு 1921**.பெருங்குளம் அமைந்துள்ள இடம் **மொகஞ்சதாரோ**. சிந்து வெளி மக்கள் பயன்படுத்திய எழுத்து முறை சித்திர எழுத்து முறை

## 3. பண்டையத் தமிழகம்

- வரலாற்றுக் காலத்திற்கு முன்னர் குமரி முனைக்குத் தெற்கே உள்ள இந்துமாக்கடல் பகுதி, ஒரு பெருநிலப்பரப்பாக இருந்தது. அதைக் குமரிக் கண்டம் என்பர் புலவர். தென்னாட்டைப் போன்று எட்டு, பத்து மடங்கு பெரிய அந்நிலப்பரப்பில், பஃறுளியாறு ஓடியது. நமது தமிழ்நாடு மூவேந்தர் எனப்பட்ட சேர, சோழ, பாண்டியர் மரபு வழியினரான மாமன்னர்களால், பண்டைக் காலம் முதல் ஆளப்பட்டு வந்தது. ஆங்கிலேயர் ஆட்சியில் தென்னாட்டின் பெரும் பகுதி **'சென்னை மாகாணம்'** என்று அழைக்கப்பட்டது. நாடு சுதந்திரம் பெற்ற பின் தமிழ்மொழி பேசப்படும் மாநிலமாக சென்னை மாகாணம் திருத்தி மாற்றி அமைக்கப்பட்டது. 1967 ஆம் ஆண்டில் முதலமைச்சராக அமர்ந்த அறிஞர் அண்ணா அவர்களால் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்பட்டது.


## மூன்று சங்கங்கள்

- அக்காலத்தில் பாண்டியர் தலைநகர் 'தென்மதுரை', அங்குத் தமிழ் வளர்த்த தலைச் சங்கம் கூடியது என்று கூறப்படுகிறது. பின்னர் நிகழ்ந்த கடற்கோளால், தென் மதுரை உள்ளிட்ட பெருநிலப்பகுதி கடலில் மூழ்கியதால், நீரில் மூழ்காத நிலப்பரப்பில் கபாடபுரத்தை தலைநகராகக் கொண்டு பாண்டிய அரசு நடைபெற்றது. அந்தத் தலைநகரும் பின்னர் கடற்கோளுக்கு இரையானது. பின்னர் மதுரை மூதூரில் தமிழ் வளர்த்த புலவர்களின் கடைச் சங்கம் நடைபெற்றது. இங்குப் பாண்டிய மன்னர் தலைமையில் புலவர்கள் கூடித் தமிழ் ஆய்வு நடத்திய சிறப்பால், இந்நகரே **'கூடல்'** என்றும் பெயர் பெறுவதாயிற்று.

## லெமூரியா கண்டம்

- கடற்கோளால் மூழ்கிப்போன குமரிக் கண்டத்தில்தான், பல்லுயிர்களும் பெருகுதற்கேற்ற தட்பவெப்பச் சூழல் நிலவியது. ஆதனால் பரிணாம வளர்ச்சி முறையில், அங்கு தான் முதல் மனித இனம் தோன்றியிருக்க வேண்டும், அந்த மாந்தர் பேசிய முதல் மொழியே, தமிழின் மூலமொழி ஆகும். அந்த இனமே தமிழ் இனமாக உருக்கொண்ட தொன்மக்கள் ஆவர் என ஆய்வாளர் தெரிவிக்கின்றனர். அந்தப் பெருநிலத்தின் ஒரு பகுதியான தென்னாட்டில் வாழ்வோர், அந்தக் குமரிக் கண்ட மாந்தர் வழிவந்த இனத்தாராகத் தான் இருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

- இதற்கு மாறாக, குமரிக் கண்டத்திற்கு முன்னதாக அப்பகுதியை உள்ளடக்கிய ஒரு பெரும் கண்டம், ஆப்பிரிக்காவையும், ஆஸ்திரேலியாவையும் இணைக்குமாறு நிலவியதென்றும், அந்தக் கண்டத்தில் வாழ்ந்த 'லெமூர்' என்னும் குரங்கினத்தின் பெயரால் அக்கண்டம் **'லெமூரியா'** என்று பெயர் பெற்றது என்றும் அங்குத் தோன்றிய மனிதக் குரங்கே முதல் மனிதன் பிறக்கக் காரணம் என்றும் கருதுகின்ற ஆய்வாளரும் உள்ளனர்.




இலெமூரியாக் கண்டம் : கடல்கோளால் கொள்ளப்பட்ட பழந்தமிழ்க் குமரிக்கண்டம்

SHUNMUGAM IAS STUDY CIRCLE H.O: Coimbatore -99941 46662 B.O: Tirunelveli- 95972 11166, Tirupur-99944 27714

### செம்புக் கற்காலம்

- புதிய கற்கால முடிவில் செம்பு என்னும் உலோகத்தின் பயனை அறிந்தனர். செம்பினால் கருவிகள் செய்தனர். அத்துடன் சிறு கற்கருவிகளையும் பயன்படுத்தினர். எனவே, அக்காலம் செம்புக் கற்கருவிகள் காலம் என்று குறிப்பிடப்படுகிறது. அக்காலத்தில் மக்கள் பயன்படுத்திய மண்பாண்டங்களின் மேல் வண்ண ஓவியங்கள் வரைந்தனர். இவை வரிக்கோலங்களாக அமைந்து இருந்தன.

### இரும்புக் காலம்

- இரும்பினால் கருவிகள் செய்த காலம் இரும்புக் காலம் எனப்படுகிறது. இக்காலத்தில் வீட்டுச்சாமான்களும், பயிர்த்தொழில் கருவிகளும் இரும்பினால் செய்யப்பட்டன. உலோகத்தை உருக்கிக்கருவிகள் செய்ய அறிந்தனர். அவர்களிடம் கற்பனைத் திறன் காணப்பட்டது. வேதகால நாகரிகம் இரும்புக் காலத்தை சார்ந்தது.

## 2.சிந்துசமவெளி நாகரிகம்

- மனிதனுக்கு முதன் முதலில் தெரிந்த உலோகம் **செம்பு (தாமிரம்).** ஆதனால் அவன் செம்பு, கல் இரண்டையும் பயன்படுத்தினான். அக்காலமே செம்புக்கற்காலம் எனப்படுகிறது. அக்காலத்தில் தான் இந்தியாவில் மிகத் தொன்மை வாய்ந்த நகர நாகரிகம் செழித்திருந்தது. சிந்துவெளி நாகரிகமே இந்திய நாகரிகத்தின் தொடக்கமாக விளங்குகிறது.

### ஹரப்பா


- "ஹரப்பா" என்ற சிந்தி மொழிச் சொல்லுக்குப் புதையுண்ட நகரம் என்பது பொருள். இது பஞ்சாப் மாநிலத்தின் சிந்து நதியின் கிளை நதியான ராவி நதிக்கரையில் அமைந்துள்ளது. சுமார் 4,700 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்நாகரிகம் இந்தியாவில் மலர்ந்து இருந்ததாகக் கண்டறியப்பட்டது. இதைப் போன்ற நகரங்களின் இடிபாடுகள் **மொகஞ்சதேரா, சான்குதாரோ, கலிபங்கன், லோத்தல்** போன்ற வேறு பல இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டன. மொகஞ்சதாரோ என்ற சிந்தி மொழிச் சொல்லுக்கு **இடுகாட்டு மேடு** என்பது பொருள்.



### சிந்து வெளி மக்களின் வாழ்க்கை முறை

- சிந்து வெளி நகரங்களில் வரிசையான குடியிருப்புகள் காணப்படுகின்றன. அவை நகராட்சி நிருவாகப்பணியில் ஈடுபட்டிருந்தோருக்கானவை எனக் கருதப்படுகின்றன. மக்கள் கடல்வழி வாணிகம் செய்து உலோகங்கள், விலையுயர்ந்த கற்கள், அணிகலன்கள் மற்றும் பல்வேறு பயன்பாட்டுப் பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்தனர் என்பது தெளிவாக புலப்படுகிறது குழந்தைகள் விளையாடும் சுடுமண் பொம்மைகளும், கிளிஞ்சல், பித்தளை, செம்பு, வெள்ளி, தங்கம் முதலியவற்றால் செய்யப்பட்ட பல விளையாட்டுப் பொருள்களும் இங்குக் காணப்படுகின்றன.

- ஆயுதங்கள், வீட்டுச்சாமான்கள், கருவிகள் முதலியவற்றைச் செய்யச் செம்பையும், வெண்கலத்தைம் பயன்படுத்தினர்.தங்கமும் வெள்ளியும் அணிகலன்கள் செய்யப் பயன்பட்டன. எடைக்கற்கள் ஒருவகைத் திண்மையான கற்களால் தயாரிக்கப்பட்டு இருந்தன. செவ்வக வடிவிலான நாற்றுக்கணக்கான முத்திரைகளும் இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் **சித்திர**



**வடிவிலான எழுத்துக்கள்** எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு சித்திரமும், ஒரு குறிப்பிட்ட கருத்தைப் புலப்படுத்துகின்றது. ஏடுகளில் வரிகள் வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கமாகவும், இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கமாகவும் எழுதப்பட்டு உள்ளது.

- சிந்து வெளியில் விவசாயம் மக்களின் முக்கியத் தொழிலாகும். கோதுமை, பார்லி போன்றவற்றை விளைவித்தனர். மிஞ்சிய தானியங்களைக் களஞ்சியங்களில் சேமித்து வைத்தனர். மக்கள் பருத்தி மற்றும் கம்பளி ஆடைகளை அணிந்தனர். வேட்டி போன்றவற்றைக் கீழ் ஆடையாகவும், சால்வையை மேல் ஆடையாகவும் அணிந்தனர். தங்கம், வெள்ளி, தந்தம், விலையுயர்ந்த கற்கள் போன்றவற்றை அணிகலன்கள் செய்யப் பயன்படுத்தினர்.

SHUNMUGAM IAS STUDY CIRCLE

## பழைய கற்காலம்

- ஆதி மனிதனின் பயன்படுத்திய கற்கருவிகளைக் கொண்டு கற்காலத்தைப் பழைய கற்காலம், புதிய கற்காலம் என இரண்டாக பிரிக்கலாம். பழைய கற்காலத்தில் மனிதன் ஒரே இடத்தில் நிலையாகத் தங்கி வாழவில்லை. காடுகளில் வாழ்ந்தான், மரக்கிளை களிலும், மரப்பொந்துகளிலும், குகைளிலும் தங்கினான்.

- ஆதி மனிதன் **'சிக்கிமுக்கி'** கற்களைப் பயன்படுத்தி நெருப்பை உண்டாக்கினான். ஆதி மனிதன் இடி, மின்னல், முதலியவற்றுக்குப் பயந்தான்; எனவே அவற்றை வணங்கினான். மேலும் இக்காலத்தில் வாழ்ந்த மக்கள் **"குவார்ட்சைட்"** எனப்படும் கரடு முரடான கற்களை வேட்டையாடும் கருவிகளாகப் பயன்படுத்தினர்.

- பழைய கற்கால கருவிகளை தமிழகத்தின் **காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர்** மாவட்டங்களிலும் மத்தியப் பிரதேசத்திலுள்ள சோன் அற்றுப்படுகை, பிம்பேட்கா, மஹேஸ்வா, இராஜஸ்தானில் உள்ள லூனி ஆற்றுச் சமவெளி, பாகல்கோட்(கர்நாடகம்), ஆந்திராவிலுள்ள கர்னூல் குகைகள், ரேணிகுண்டா ஆகியவற்றில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. **"ராபர்ட் புரூஸ் பூட்"** என்பவர்தான் முதன் முதலில் இத்தகைய கருவிகளை சென்னைக்கு அருகில் உள்ள **பல்லாவரத்தில்** கண்டுபிடித்தார். சென்னை அடுத்து உள்ள கொறட்டலையாற்றின் சமவெளியிலும், வட மதுரை யிலும் இக்காலத்தை சேர்ந்த கைக்கோடாரிகள் மற்றும் சிறிய கற்கருவிகள் கிடைத்துள்ளன.

## முக்கியத் தோற்றங்களின் ஆண்டுகள்

- ☑.பூமியின் தோற்றம் - 460 கோடி ஆண்டுகள் முன்
- ☑.மனிதனின் தோற்றம் - 40,000 ஆண்டுகளுக்கு முன் (ஹோமோ செப்பியன்ஸ்).
- ☑.வேளாண்மை தோன்றிய காலம் - சுமார் 8,000 ஆண்டுகளுக்கு முன்.
- ☑.நகரங்களின் தோற்றம் - 4,700 ஆண்டுகள் முன்.

- தொடக்கத்தில் ஆடைகளின்றித் திரிந்த பழைய கற்கால மக்கள் பின்னர் மரப்பட்டைகள், இலைகள் மற்றும் விலங்குகளின் தோல்கள் போன்றவற்றால் ஆன ஆடைகளை அணிந்தனர். இவற்றால் கடுங் குளிரிலிருந்தும், கடும் வெப்பத்திலிருந்தும் தங்களைக் காத்துக் கொண்டனர். காடுகளில் கிடைத்த காய்கள், கனிகள், கிழங்குகள், விலங்குகளின் இறைச்சி முதலியவற்றை உண்டான்.

- முதலில் சிறு சிறு விலங்குகளைத் தனியாக வேட்டையாடினான். பின்னர், கூட்டத்துடன் சென்று வேட்டையாடினான். வேட்டையில் ஆண்களும், பெண்களும் பங்கேற்றனர். (மடியில் குழந்தையைக் கட்டிக் கொண்டு ஒரு பெண் அம்பு விடுவது போன்ற ஓவியம் மத்தியப்பிரதேசம் மாநிலத்தின் **"பிம்பேட்கா"** குகையில் அமைந்துள்ளது.)

கி.மு – கிறிஸ்து பிறப்பதற்கு முன்

(BC – Before Christ)

கி.பி – கிறிஸ்து பிறந்த பின்

(AD – Anno Domini)

CE- Common Era

BCE – Before Comman Era.

## திருவள்ளுவர் பிறந்த ஆண்டு கி.மு.31

தி.மு.திருவள்ளுவருக்கு முன்

(B.T- Before Thiruvalluvar)

தி.பி.-திருவள்ளுவருக்குப் பின்

(A.T- After Thiruvalluvar)

## புதிய கற்காலம்

- புதிய கற்கால மனித வாழ்க்கை பழைய கற்காலத்திலிருந்தும் மாறுபட்டதாகவும் மேம்பட்டதாகவும் இருந்தது. இம் மாற்றம் படிப்படியாக நடைபெற்றது. புதிய கற்கால மக்கள் குகைகளில் வாழ்வதைக் கைவிட்டு களிமண் குடிசைகள் மற்றும் கூரை வீடுகளை அமைத்து அவற்றில் வாழ்ந்தனர். வேளாண்மைத் தொழிலைப் பின்பற்றியதுடன் பிராணிகளையும் வளர்க்கத் தொடங்கினர். புதிய கற்கால மக்கள் பயிரிடுதலில் ஆர்வம் காட்டினர். மனித நாகரிக வளர்ச்சியின் அடுத்த படிநிலையைப் புதிய கற்காலம் எனலாம்.

- இக்காலத்தின் முக்கிய மாற்றம் உணவு உற்பத்தி ஆகும். இக்காலத்தில் தான் சக்கரமும் உருவாக்கப்பட்டது. மேலும் சக்கரத்தை பயன்படுத்தி மட்பாண்டம் செய்யப்பட்டது. பின்னர் உலோகத்தின் பயன் அறிமுகமானது. முதலில் பயன்படுத்திய உலோகம் **செம்பு**. தமிழகத்தில் புதிய கற்காலத்தைச் சேர்ந்த மட்பாண்டங்கள் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, சேலம், புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் கிடைத்துள்ளன.



SHUNMUGAM IAS STUDY CIRCLE

SHUNMUGAM IAS STUDY CIRCLE H.O: Coimbatore -99941 46662 B.O: Tirunelveli- 95972 11166, Tirupur-99944 27714

- ஸ்பெயின் நாட்டிலிருந்து புறப்பட்ட இவர் பிலிப்பைன்ஸ் தீவுகள் வரை சென்றார். கடற்பயணத்தின் போது இவரும், இவருடன் பயணம செய்த பலரும் இறந்தனர். அவருடைய இறப்பிற்கு பிறகு, உயிருடன் இருந்த சிலர் மட்டுமே **கி.பி.1522** ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டிற்குத் திரும்பினர். இவர் சுமார் 3 வருடங்கள் கடற்பயணம் மூலம் உலகத்தை சுற்றினார். இந்தப் பயணத்தால் உலகம் உருண்டை என்பது உறுதி செய்யப்பட்டது. தனது பயண அனுபங்களைத் திசைகளுடன் கூடிய வரைபடத்தை வரைந்து குறித்து வைத்துக் கொண்டார். முதன் முதலாக **வரைபடத்தை** பயன் பாட்டிற்கு கொண்டு வந்தவர் மெகல்லன்.

- **கிறிஸ்டோபர் கொலம்பஸ் (கி.பி 1451-1506):** இவர் இத்தாலியில் உள்ள **ஜெனோவா** நகரில் பிறந்தார். மார்க்கோபோலோவின் பயணக் குறிப்பை வாசித்த கொலம்பஸ் கடற்பயணம் செய்ய மிகவும் ஆர்வம் கொண்டார். அக்காலத்தில் ஐரோப்பாவிற்கும், ஆசியாவிற்கும் இடையே வாணிகம் தரை வழியாக நடைபெற்றது. எனவே, சீனா, இந்தியா போன்ற நாடுகளுக்குக் கடல் வழி கண்டறியும் தேவை ஏற்பட்டது. மேலும், இவர் மேற்குத் திசையில் கடற்பயணம் செய்து இந்தியாவிற்கு செல்வதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். **கி.பி.1492** இல் ஸ்பெயின் மன்னரின் ஆதரவு பெற்று, **'சாந்தாமாரியா'** என்ற கப்பலில் பயணம் மேற்கொண்டார். 50 நாட்கள் பயணத்திற்குப் பிறகு வட அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரையிலுள்ள மேற்கு இந்தியத் தீவுகளை வந்தடைந்தார். இவற்றை இந்தியத் தீவுகள் என் கொலம்பஸ் எண்ணினார். அப்பகுதி மக்களைச் செவ்விந்தியர்கள் என்றும் கருதினார். இவருக்குப் பின் கி.பி.1520 இல் கடற்பயணம் மேற்கொண்ட **அமெரிக்கோ வெஸ்புகி** என்பவர், கொலம்பஸ் கண்டறிந்தது இந்தியப் பகுதி அன்று, அது ஒரு புதிய நிலப்பகுதி என்று கூறினார். எனவே அப்பகுதி அவர் பெயரால் **அமெரிக்கா** என்று பெயரிடப்பட்டது.



- **வாஸ்கோ-டா-காமா (கி.பி 1460-1524):** வாஸ்கோ-டா-காமா ஐரோப்பியக் கண்டத்தைச் சார்ந்த போர்த்துக்கீசிய மாலுமி ஆவார். இவர் **பார்த்தலோமியா டயஸ்** கடற்பயணம் மேற்கொள்வதற்கான கப்பல் கட்டும் பணியை மேற்பார்வை செய்தவர். இவர் தமது பயணத்தைப் போர்த்துகீசிய நாட்டின் லிஸ்பன் துறைமுகத்தில் தொடங்கி, ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரை ஓரமாக உள்ள **நன்னம்பிக்கை முனையை** வந்து அடைந்தார்.

- இந்திய வணிகர் ஒருவர் உதவியோடு, வாஸ்கோ-டா-காமா இந்தியப் பெருங்கடலைக் கடந்து, இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் கேரள மாநிலத்தில் அமைந்துள்ள **கள்ளிக்கோட்டை** என்ற இடத்திற்கு **கி.பி.1498** ஆம்ஆண்டு **மே 20** நாள் வந்தடைந்தார். இவர் ஐரோப்பாவிற்கும், இந்தியாவிற்கும் இடையேயான கடல் வழிப்பாதையை முதன் முதலில் கண்டறிந்தார். இவரது பயணமே, இந்தியாவில் முதன் முதலில் கடல் வழி வாணிகம் செய்திடவும், ஐரோப்பியக் காலனி ஆதிக்கத்திற்கும் அடிகோலியது. இவர் இந்தியாவிற்கு மேலும் இரு முறை பயணம் செய்தார்.

| நிலப்பயணம் | கடற்பயணம் |
|---|---|
| மெகஸ்தனிஸ் | மார்க்கோபோலோ |
| இபின் பதூதா | பார்த்தலோமிய டயஸ் |
| யுவான் சுவாங் | கிறிஸ்டோபர் |
| பாஹியான் | வாஸ்கோ-டா-காமா |
| | மெகல்லன் |

**6–ம் வகுப்பு**

## 1.வரலாற்று முற்பட்ட காலம்

- பொதுவாக வரலாற்றினை, வரலாற்றுக் காலம் மற்றும் வரலாற்றுக்கு முந்தைய காலம் என்று இரு காலக்கட்டங்களாகப் பிரிக்கலாம். அக்கால மனிதர்கள் குறித்த எழுத்துப்பூர்வமான ஆதாரங்களும் பிற ஆதாரங்களும் கொண்ட காலத்தை வரலாற்றுக் காலம் என்கிறோம். வரலாற்றுக்கு முந்தைய காலத்தை பற்றி அறிய அக்காலத்தைச் சார்ந்த பொருள்கள், சிதைவுகள், கற்கள், மரங்கள், மண்டை ஓடுகள், படிமங்கள், விலங்குகளின் கொம்புகள் போன்றவை உலகின் பல்வேறு பகுதிகளிலும் கிடைத்துள்ளன.

### வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பதை

- பழைய கற்காலம் -Palaeolithic age (கி.மு.10,000 ஆண்டுகளுக்கு முன்)
- புதிய கற்காலம் -Neolithic age (கி.மு.10,000 – கி.மு 4,000)
- செம்புக் கற்காலம் -Chalcolithic age (கி.மு.3,000 – கி.மு 1,500)
- இரும்புக் காலம் -Iron age (கி.மு.1,500 – கி.மு 600). தமிழக வரலாற்றில் முற்பட்ட காலத்தை நான்கு வகைப்படுத்தலாம்.
  1. **பழைய கற்காலம்** 2. **புதிய கற்காலம்**
  3. **உலோக காலம்** 4. **பெருங்கல் காலம்.**

SHUNMUGAM IAS STUDY CIRCLE H.O: Coimbatore -99941 46662 B.O: Tirunelveli- 95972 11166, Tirupur-99944 27714

SHUNMUGAM IAS STUDY CIRCLE H.O: Coimbatore -99941 46662 B.O: Tirunelveli- 95972 11166, Tirupur-99944 27714

- **பாஹியான் (கி.மு 422 – 337):**பாஹியான் **இரண்டாம் சந்திரகுப்தர்** காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்தவர். புத்த மதத் துறவியான இவர் இந்தியாவின் பலபகுதிகளையும் சுற்றிப்பார்த்துள்ளார். பல புத்த மதக் கோயில்களையும் கல்வெட்டுகளையும் பார்வையிட்டார்.

- **யுவான் சுவாங் (கி.பி 603-664):** இவர் சீனாவிலிருந்து காஷ்மீர் பள்ளத்தாக்கு வழியாக இந்தியாவிற்கு வருகை புரிந்தார். **ஹர்சவர்த்தனார்** ஆட்சிக் காலத்தில் புத்த மதத்தை பற்றி அறிந்து கொள்ள இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டார். இவர் நாளந்தா பல்கலைக்கழகத்தில் 12 ஆண்டுகள் தங்கி புத்த மதக்கல்வி பெற்றார். இலக்கியம், இலக்கணம், மருத்துவம், வேதங்கள், தத்துவம், கைவினை நுட்பம் முதலியவற்றை கற்றார். அக்காலத்தில் காஞ்சியில் 10,000 புத்த மதத் துறவிகள் வாழ்ந்தனர் என்றும், நூற்றுக்கு மேற்பட்ட புத்த மடாலயங்கள் இருந்தன என்றும் தன் பயண நூலில் குறிப்பிட்டுள்ளார். இவருடைய பயண நூல் **'சியூக்கி'** எனப்படும். பாண்டிய நாட்டில் நிலவிய பஞ்சத்தைப் பற்றியும் இவர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

- **இபின் ப்தூதா (கி.பி.1304-1368):**இந்தியாவிற்கு வருகைபுரிந்த முதல் இசுலாமியப் பயணி ஆவார். இவர் மொராக்கோ நாட்டைச் சார்ந்தவர். இவர் தென் மேற்குக் கணவாய் வழியாகத் **துக்ளக்** ஆட்சிக்காலத்தில் இந்தியா வந்தடைந்தார். இவர் இந்தியாவின் சமூக, அரசியல் நிலைகளைக் காணப் பயணம் செய்தார். இந்தியாவில் இருந்த போது 7 ஆண்டுகள் டெல்லியில் நீதிபதியாகப் பணியாற்றினார். சுமார் 30 ஆண்டுகள் குதிரை, ஒட்டகம், படகு மற்றும் தரை வழியாக அதிக தூரம் பயணம் செய்தார். தன் வாழ்நாளில் சுமார் 44 நாடுகளுக்குப் பயணம் செய்துள்ளார். டெல்லி சுல்தான்களின் அரசியல், சமுதாய அமைப்பைப் பற்றி கூர்ந்து கவனித்துத் தன் நூலில் கூறியுள்ளார். தான் கண்ட நாடுகளின் புவியியல், இயற்கை வளம், மக்கள் வாழ்க்கை முறை ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். இவரது பயணம் புவியியலுக்கு முக்கியப் பங்களிப்பை அளித்துள்ளது.



- மார்க்கோபோலோ(கி.பி 1524-1324):மார்க்கோபோலோ இத்தாலி நாட்டில் **வெனீஸ்** நகரில் பிறந்தார். **கி.பி. 1271** ஆம் ஆண்டு தன் தந்தையுடன் சிறுவயதிலேயே சீனாவிற்கு பயணம் மேற்கொண்டார். முதலில் இவர்கள் கடல் வழியாகப் பாரசீக வளைகுடாவை அடைந்தனர். பின்னர் தரைவழியாக 5 ஆண்டுகள் பயணம் செய்து, மேற்கு ஆசியாவில் உள்ள கோபி பாலைவனத்தைக் கடந்து சீனாவை அடைந்தார்.

- மார்க்கோபோலோ சீனாவில் **குப்லாய்கானின்** அரசவையில் பணிபுரிந்தார். சீன மன்னர் குப்லாய்கான் போர்களில் வெற்றி பெற ஐரோப்பியப் போர் முறைகளை எடுத்துக்கூறி உதவினார். எனவே, இவர் சீன அரசின் ஒரு பகுதிக்கு கவர்னராகவும் மற்றும் தூதுவராகவும் பணியாற்றினார். இவர் சீனாவிலிருந்து இந்தியா, மியான்மர் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார். சீனாவில் 16 ஆண்டுகள் வாழ்ந்தார். பின்னர் தனது தாய் நாட்டிற்குத் திரும்பினார். தனது பயண அனுபவங்களை **'மிலியான்-2'** எனும் தனது பயண நூலில் பதிவு செய்துள்ளார்.




- **பார்த்தலோமியா டயஸ் (கி.பி 1450-1500):**இவர் போர்த்துக்கீசிய நாட்டு மன்னர் **இரண்டாம் ஜான்** என்பவரிடம் இராணுவத்தளபதியாகப் பணிபுரிந்தவர். **கி.பி 1487ஆம் ஆண்டு** மூன்று கப்பல்களுடன் இந்தியாவிற்குக் கடல்வழி கண்டறியும் நோக்கத்துடன் தமது பயணத்தை தொடங்கி ஆப்பிரிக்காவின் தென் முனையை அடைந்தார். அப்போது ஏற்பட்ட கடும் புயலின் தாக்கத்தால் தொடர்ந்து கப்பல் பயணம் மேற்கொள்ள இயலவில்லை. எனவே, ஆப்பிரிக்காவின் தென் முனையை அவர் புயல் முனை என்று அழைத்தார். அதன் பின்னர் பயணம் தொடர்ந்து மேற்கொள்ள முடியாமல் தனது நாட்டிற்குத் திரும்பினார். இவர் ஆப்பிரிக்காவின் தென் முனையை அடைந்த முதல் ஐரோப்பியக் **கடற்பயணி** ஆவார். மன்னர் இரண்டாம் ஜான் புயல் முனைக்கு, **நன்னம்பிக்கை முனை** எனப் பெயரிட்டார்.

- **மெகல்லன் (கி.பி 1480-1521):** கடற் பயணம் செய்து முதன் முதலில் உலகத்தைச் சுற்றி வந்த பெருமை போர்த்துக்கீசிய மாலுமியான மெகல்லனைச் சேரும். இவர் ஸ்பெயினிலிருந்து 270 மாலுமிகளுடன் 5 கப்பல்களில் மேற்குத் திசையில் தமது கடற்பயணத்தைத் தொடங்கினார். இவர் அட்லாண்டிக் பெருங்கடல் வழியாகத் தென் அமெரிக்காவின் முனையை அடைந்தார். அதற்கு **மெகல்லன் நீர்ச்சந்தி (Megallan Strait)** எனப் பெயரிட்டார். பின்னர், பசிபிக் பெருங்கடல் வழியாகத் தனது பயணத்தை மேற்கொண்டார். இக்கடல், அலைகள் ஏதுமின்றி அமைதியாகக் காணப்பட்டதால் இக்கடலைப் **பசிபிக் (அமைதி) பெருங்கடல்** என அழைத்தார். ஐரோப்பிய நாட்டிலிருந்து மேற்கு திசை வழியாக ஆசியாவிற்குக் கடல் வழிப்பாதையைக் கண்டறிந்தார்.

SHUNMUGAM IAS STUDY CIRCLE

SHUNMUGAM IAS STUDY CIRCLE H.O: Coimbatore -99941 46662 B.O: Tirunelveli- 95972 11166, Tirupur-99944 27714

**முக்கிய ஆண்டுகளும் நிகழ்வுகளும்**

| ஆண்டு | நிகழ்வுகள் |
|---|---|
| 1600 | ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி துவக்கம் |
| 1806 | வேலூர்ப் புரட்சி |
| 1857 | பெரும் புரட்சி |
| 1905 | சுதேசி இயக்கம், வங்கப்பிரிவினை |
| 1919 | ரௌட் சட்டம், ஜாலியன் வாலாபாக் |
| 1920 | ஒத்துழையாமை இயக்கம் |
| 1930 | சட்ட மறுப்பு இயக்கம் |
| 1942 | வெள்ளையனே வெளியேறு இயக்கம் |
| 1947 | இந்தியா விடுதலை அடைதல் |
| 1950 | இந்தியா குடியரசு ஆதல் |

## 5-ம் வகுப்பு

### 1. சங்க காலம்

- நாம் வாழும் தமிழகம் மிகத் தொன்மையான சிறப்பும் வாய்ந்த வரலாற்றைக் கொண்டதாகும். பண்டையத் தமிழகம் சேர, சோழ, பாண்டியர் ஆட்சி செய்த சங்க காலம் ஆகும்.சங்க காலம் என்பது **கி.மு 300 முதல் கி.பி 300** வரை நிலவியது என்று வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர். சங்ககாலத்தை அசோகரது கல்வெட்டுகள், **உத்திரமேரூர், ஆதிச்சநல்லூர்** கல்வெட்டுகள், சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம், ரோமானிய நாணயங்கள் ஆகியன சங்க காலத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகள் ஆகும்.

- தமிழகத்தில் மூன்று சங்கங்கள் வெவ்வேறு காலக்கட்டங்களில் இருந்தன. முதற்சங்கம் இன்று கடலுள் மூழ்கியுள்ள குமரிக் கண்டத்தில் இருந்த தென்மதுரை ஆகும். இது கடல்கோளால் அழிந்தது என்று கூறுவர். இடைச்சங்கம் கடலலைகளால் பாதிக்கப்படாத வண்ணம் கடற்கரையை ஒட்டிய மேட்டுப்பாங்கான இடமாகிய கபாடபுரத்தில் அமைக்கப்பட்டது என்றும் இதுவும் கடல்கோளால் அழிந்தது என்றும் கூறுவர். இரு முறை நிகழ்ந்த கடல்கோள்கள் அச்சம் காரணமாக, கடைச்சங்கம் கடற்கரையிலிருந்து வெகு தொலைவில் அமைக்கப்பட்டது. அது இன்றுள்ள மதுரை நகரில் அமைந்திருந்தது என வரலாறு கூறுகிறது.

- **சங்க இலக்கியங்கள்:** சங்க காலத்தில் எழுதப்பட்ட பாடல்களின் தொகுப்புகள் சங்க இலக்கியங்களாகும். அவற்றில் பெரும்பாலானவை அழிந்து விட்டன. எஞ்சியவை **பத்துப்பாட்டு, எட்டுத்தொகை** நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் இயற்றப்பட்ட **தொல்காப்பியம்** தமிழின் அடிப்படை இலக்கண நூலாகும்.

- **"நலந்தரு திருவிற்பாண்டியன்"** காலத்தில் தொல்காப்பியர் தொல்காப்பியத்தை அரங்கேற்றினார்சங்க காலத்தில் தென்னிந்தியப் பகுதியைச் ***சேர, சோழ, பாண்டிய*** மன்னர்கள் ஆட்சி செய்தனர். எனவே, சங்க காலம் ***மூவேந்தர் காலம்*** என்றும் அழைக்கப்பட்டது. மூவேந்தர்கள் ஒவ்வொன்றும் தமக்கெனத் தனித்தனியே அரசு அடையாளங்களாக கொடி, பூ ஆகியவற்றைப் பெற்றிருந்தனர்.

- **சேரர்:** சேரர்கள் வில் கொடியையும் **பனம்பூ** மாலையும் தங்களுக்குரியச் சிறப்புச் சின்னங்களாகப் பெற்றிருந்தனர். சேரர்களின் தலைநகரம் **வஞ்சி** ஆகும். **தொண்டியும் முசிறியும்** இவர் தம் துறைமுகங்களாக விளங்கின. சேரர்களின் ஆட்சிப்பகுதி இன்றைய கேரளம், சேலம், கோயமுத்தூர் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்தது.

- **சேரன் செங்குட்டுவன்:** சேர மன்னர்களுள் மிக வலிமை வாய்ந்தவர் சேரன் செங்குட்டுவன். இவர் கடற்கொள்ளையர்களை வென்றார். இமயம் வரை சென்று கல் எடுத்துவந்து **கண்ணகிக்குக்** கோயில் கட்டியவர் இவரே. இவருடைய தம்பியே சிலப்பதிகாரத்தை இயற்றிய **இளங்கோவடிகள்** ஆவார்.

- **சோழர்:** சோழர்கள் புலிக்கொடியையும் **அத்திப்பூ** மாலையையும் தங்களுக்குரியச் சிறப்புச் சின்னங்களாகப் பெற்றிருந்தனர். இவர்களுடைய தலைநகரம் **உறையூர்** ஆகும். காவிரிப்பூம்பட்டினம் இவர்களின் துறைமுகமாக விளங்கியது. சோழர்களின் பேரரசு சித்தூர், திருவண்ணாமலை, திருச்சி, வேலூர், விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், நாகப்பட்டினம், கரூர், பெரம்பலூர், அரியலூர், திருவாரூர் ஆகிய நிலப்பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருந்தது.

- **கரிகாற்சோழன்:** சோழ மன்னர்களுள் புகழ் பெற்ற **கரிகாலன்** ஆவார். இவர் வெண்ணிப் போரில் சேர, பாண்டிய மன்னர்களைத் தோற்கடித்தார். காவிரி ஆற்றின் குறுக்கே இன்றும் நிலைத்து நின்று பயன் தரும் **கல்லணையைக்** கட்டினார். பல கால்வாய்களை வெட்டி வேளாண்மை வளத்தைப் பெருக்கினார். இன்றும் சிறப்போடு நிற்கும் **வெண்ணாறு** இவர் வெட்டிய மிகப் பெரிய கால்வாயாகும். இவர் கலை மற்றும் இலக்கியத்தை ஆதரித்தார். **பொருநராற்றுப்படையை** இயற்றிய **முடத்தாமக் கண்ணியார்** மற்றும் **பட்டினப்பாலையை** இயற்றிய **உருத்திரங்கண்ணனார்** ஆகிய புலவர்கள் இவரது அவையை அலங்கரித்தனர். சங்க இலக்கிய பாடல்கள் இவரது பெருமையைப் பறைசாற்றுகின்றன.

SHUNMUGAM IAS STUDY CIRCLE H.O: Coimbatore -99941 46662 B.O: Tirunelveli- 95972 11166, Tirupur-99944 27714

SHUNMUGAM IAS STUDY CIRCLE H.O: Coimbatore -99941 46662 B.O: Tirunelveli- 95972 11166, Tirupur-99944 27714

- **ஜாலியன் வாலாபாக் படுகொலை:** இந்தியர்களின் விடுதலைப் போராட்டத்தை அடக்க ஆங்கிலேயர் அடக்கு முறைச்சட்டமான ரௌலட் சட்டத்தை **கி.பி. 1919** ஆம் ஆண்டு இயற்றினர். இதை எதிர்த்து அதே ஆண்டு பஞ்சாப் மாநிலமான அமிர்தசரஸில் உள்ள



ஜாலியன் வாலா பாக் என்னும் இடத்தில் மக்கள் அமைதியாகக் கூடினர். கூட்டத்தை கலைக்க எந்த வித முன்னறிவிப்பின்றி ஆங்கிலத் தளபதி டயர் துப்பாக்கிச் சூட்டிற்கு உத்தரவிட்டார். அதில் நூற்றுக்கணக்கானோர் மாண்டனர். ஆயிரக்கணக்கானோர் காயமுற்றனர். இப்படுகொலை சுதந்திரப்போராட்டத்தில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

- **சுதந்திரப் போராட்டத்தில் காந்தியடிகள்:** வழக்கறிஞர் தொழில் பணிபுரிய தென் ஆப்பிரிக்கா சென்றிருந்த காந்தியடிகள் **கி.பி. 1915-ல்** தாயகம் திரும்பினார். இந்திய தேசிய காங்கிரசோடு இணைந்து செயல்படத் தொடங்கினார். மக்கள் அனைவரும் அவரது தலைமையில் ஒன்றிணைந்து சுதந்திரத்திற்காக போராடினர். அவர் ஆங்கிலேயருக்கு எதிராக அமைதி மற்றும் அகிம்சை வழியில் பல்வேறு போராட்டங்கள் நடத்தினார். இந்தியப் விடுதலைப் போராட்டம் காந்தியடிகள் தலைமையேற்றவுடன் புத்துணர்ச்சி பெற்றது. காந்தியடிகள் கி.பி.1920 இல் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தினார். அதன் நோக்கம் அமைதி மற்றும் அகிம்சை வழியில் சுயராஜ்யம் அடைவதே ஆகும்.

- **உப்புச் சத்தியாகிரகம்:** அனைவரும் பயன்படுத்தும் உப்பின் மீது ஆங்கிலேயர்கள் வரி விதித்தனர். இதனை எதிர்த்தும், முழு விடுதலை கோரியும் காந்திஜி தலைமையில் கி.பி. 1930 இல் சட்டமறுப்பு இயக்கம் நடைபெற்றது. காந்தியடிகள், தாமே தலைமையேற்று குஜராத்திலுள்ள சபர்மதி ஆசிரமத்தில் இருந்து தண்டி கடற்கரை வரை சென்று உப்பு காய்ச்சினார். இது தண்டி யாத்திரை என அழைக்கப்படுகிறது. அதே சமயத்தில் தமிழகத்தில் இராஜாஜி தலைமையில் திருச்சியிலிருந்து வேதாரண்யம் வரை பாதயாத்திரையாக சென்று உப்புச்சத்தியாகிரகம் நடத்தப்பட்டது.

- **கி.பி. 1942** ஆம் ஆண்டு **ஆகஸ்ட் 8** இல் பம்பாயில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் வெள்ளையனே வெளியேறு என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தனர். 'செய் அல்லது செத்து மடி' என்ற முழக்கத்தை காந்திஜி மக்களுக்கு வழங்கினார். போராட்டங்கள் தீவிரமானதை உணர்ந்த ஆங்கிலேயர்கள் படிப்படியாக இந்தியர்களுக்க அரசாங்கத்தில் பங்களித்தனர்.

- இவ்வாறு மக்களின் உயிர்த்தியாகத்தால் **கி.பி.1947** ஆம் ஆண்டு **ஆகஸ்ட் 15** ஆம் நாள் இந்தியா விடுதலை பெற்றது. இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு டெல்லி செங்கோட்டையில் இந்திய தேசியக்கொடியை ஏற்றினார்.

- **கப்பலோட்டிய தமிழன்:** கப்பலோட்டிய தமிழன் என்று அழைக்கப்படுபவர் வ.உ.சிதம்பரனார் ஆவார். சுதேசி இயக்கம் தமிழ்நாட்டிற்கு அளித்த தவப்புதல்வர் தான் வ.உ.சிதம்பரம் பிள்ளை. இவர் **கி.பி. 1872** ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் நாள் ஒட்டப்பிடாரத்தில் பிறந்தார். சட்டம் பயின்ற இவர், இந்தியர்களுக்கு ஆங்கிலேயரை எதிர்த்து சுதேசிக் கப்பல் நிறுவனத்தை உருவாக்கினார்.

- **கலிலியோ, லாவோ** என்ற இரு கப்பல்களை வாங்கினார். ஆங்கில அரசு கொடுத்த பல இன்னல்களுக்கிடையே இந்தக் கப்பல் போக்குவரத்தை இந்தியர்களுக்காக இயக்கினார். இதனால் அவர் **'கப்பலோட்டிய தமிழன்'** என்று அழைக்கப்பட்டார்.




அவர் நெல்லையில் ஆங்கில அரசை எதிர்த்து எழுச்சி உரை ஆற்றியதால் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் கல் உடைத்தார், செக்கிழுத்தார். பின்னர் **கி.பி. 1912** இல் விடுதலை செய்யப்பட்டார். அவர் **கி.பி 1936 ஆம் ஆண்டு நவம்பர் 18** இல் இயற்கை எய்தினார். இந்திய அரசாங்கம் இவரை பெருமைப்படுத்தும் விதமாக **கி.பி. 1972** ஆம் ஆண்டு **செப்டம்பர் 5** -ஆம் நாள் சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட்டது.

- **தில்லையாடி வள்ளியம்மை:** தமிழகத்தில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள தில்லையாடி என்ற கிராமத்தில் வள்ளியம்மை பிறந்தார். பின்னர் தென்ஆப்பிரிக்காவில் குடியேறியவர். தென் ஆப்பிரிக்காவில் வசிக்கும் இந்தியர்கள் அனைவரும் கிறித்துவ முறைப்படி தான் திருமணம் செய்ய




வேண்டும் என்ற தென் ஆப்பிரிக்காவின் அரசை எதிர்த்து தில்லையாடி வள்ளியம்மை, காந்தியடிகள் மற்றும் கஸ்தூரி பாய் அம்மையாருடன் இணைந்து போராடினார். இதற்காக இவர் மூன்று மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவித்தார். சிறையில் ஏற்பட்ட உடல் நலக்குறைவு காரணமாக இளம் வயதில் இயற்கை எய்தினார்.

SHUNMUGAM IAS STUDY CIRCLE H.O: Coimbatore -99941 46662 B.O: Tirunelveli- 95972 11166, Tirupur-99944 27714

## Integration History on 3rd Std to 12th Std

### 3–ம் வகுப்பு

- ஒரிஸாவில் உள்ள **கொனார்க்கில்** சூரியனார் கோவில் அமைந்துள்ளது. இந்தியாவின் வட கிழக்கில் உள்ள **அசாம்** மாநிலத்தில் கௌகாத்தியில் **கஜீரங்கா உயிரியில் பூங்கா** அமைக்கப்பட்டுள்ளது. மேகாலயா மாநிலத்தின் தலைநகரான ஷில்லாங்கில் **எலிபெண்டா அருவி** உள்ளது. காஷ்மீரின் தலைநகர் ஸ்ரீநகரில் உள்ள **தால் ஏரி** மிகவும் புகழ்பெற்றது. மலைப்பகுதி –குறிஞ்சி. காடுகள்–முல்லை. வயல் வெளிகள்– மருதம். கடற்கரைப் பகுதிகள்–நெய்தல். வறண்ட நிலப் பகுதிகள்–பாலை.



- **பரத மன்னன்:** துஷ்யந்தன் என்னும் அரசனின் மகன் பரதன். அவனுடைய தாயின் பெயர் சகுந்தலை. பரதன் தன் இளம் வயதிலேயே அரச பதவியை ஏற்றார். இமயம் முதல் குமரி வரை இந்தியா முழுவதையும் வென்று தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார். எனவே, **சக்கரவர்த்தி** என்று அழைக்கப்பட்டார். இவர் ஆட்சி செய்த பகுதியைப் **பரத கண்டம்** என்று அழைப்பர். ஆட்சி புரிவதில் பேரும் புகழும் பெற்று விளங்கினார். பரத கண்டமே இன்றைய இந்தியா ஆகும். நமது இந்திய நாடு பரத மன்னனின் நினைவாகவே இன்றும் பரத நாடு என்று அழைக்கப்படுகிறது.

- **ஜான்சி ராணி:** 1828 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் நாள் வாரணாசியில் (காசி) ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக் குழந்தையின் பெயர் **மணிகர்ண்கா** இவரை மனு என்றும் அழைப்பர். வீட்டிலேயே கல்வி கற்றார். தற்காப்பு, குதிரையேற்றம், வில்வித்தை வாள் பயிற்சி போன்றவற்றில் சிறந்து விளங்கினார். ஜான்சி நாட்டின் அரசன் கங்காதர ராவை தம் 14 வயதில் மணந்து கொண்டார். திருமணத்திற்கு பிறகு அவர் **லட்சுமி பாய்** என அழைக்கப்பட்டார். கணவர் இறந்த பிறகு இவரே நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். லட்சுமி பாய் 1857 ஆம் ஆண்டு நடந்த இந்திய முதல் விடுதலைப் போரில் பங்கேற்றார். ஆங்கில ஆட்சியை எதிர்த்து குதிரை மீதேறி போர்க்களத்திற்கு சென்றார். ஆண் வேடமிட்டு தன் வளர்ப்பு மகனைத் தன்னுடன் சுமந்தபடியே போரிட்டார். 1858-ல் போர்க்களத்தில் வீர மரணம் அடைந்தார். ஜான்சிராணி இந்திய வீரப் பெண்மணிகளில் குறிப்பிடத்தக்கவர்.



### 4–ம் வகுப்பு

- ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வாணிபம் செய்ய வந்தனர். அவர்கள் கி.பி.1600 இல் கிழக்கிந்திய கம்பெனியை நிறுவி சூரத், சென்னை, கொல்கத்தா ஆகிய நகரங்களில் வாணிபம் செய்தனர். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக நம் நாட்டை அடிமைப்படுத்தி ஆட்சி செய்தனர். ஆங்கில ஆட்சியிலிருந்து விடுபட நம் நாட்டின் பல புரட்சிகள் நடைபெற்றன. அவற்றில் மிகவும் முக்கியமானவை கி.பி. 1806-ல் நடைபெற்ற வேலூர்ப் புரட்சியும் கி.பி. 1857-ல் நடைபெற்ற பெரும் புரட்சியும் ஆகும்.

- **வேலூர்ப்புரட்சி:** ஐரோப்பிய பாணியிலான தொப்பிகளை அணிவதற்கு இந்தியச் சிப்பாய்கள் வலியுறுத்தப்பட்டனர். சமய அடையாளங்களான திலகமிடுதல், தாடி வளர்த்தல் ஆகியவற்றிற்கு ஆங்கிலேய அரசு தடை விதித்தது. இவை வேலூர் புரட்சிக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. வேலூர்ப் புரட்சியானது கி.பி.1857 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் புரட்சிக்கு ஒரு ஒத்திகையாகும் என்று கூறியவர் **'வி.டி. சாவார்கர்'.**

- **பெரும் புரட்சி:**பசு மற்றும் பன்றிக் கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்களைப் பயன்படுத்த இந்தியச் சிப்பாய்களை ஆங்கிலேயர் வற்புறுத்தினர். இது இந்து மற்றும் இஸ்லாமியப் படைவீரர்களின் சமய உணர்வைப் புண்படுத்தியது. இதுவே இந்தப் புரட்சியின் முக்கியத் தலைவர்களாக பகதூர்ஷா, நானாசாகிப், தாந்தியாதோப் மற்றும் ஜான்சி இராணி லட்சுமி பாய் ஆகியோர் இருந்தனர்.

- **இந்திய தேசிய காங்கிரஸ்:**இந்தியர்களின் குறைகள் மற்றும் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்காக கி.பி. 1885 ஆம் ஆண்டு ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்ற ஆங்கில அதிகாரியால் இந்திய தேசிய காங்கிரஸ் மும்பையில் தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் இந்த அமைப்பு சுதந்திர போராட்டத்தை வழி நடத்தும் அமைப்பாக மாறியது. இந்திய தேசிய காங்கிரஸ் பல போராட்டங்களை ஆங்கிலேயருக்கு எதிராக நடத்தியது.

- **வங்கப்பிரிவினை:** இந்தியாவில் ஆங்கில அரசுக்கு எதிராக போராட்டங்கள் தீவிரமடைவதை அறிந்த ஆங்கிலேயர்கள் இந்து முஸ்லீம் ஒற்றுமையைக் குலைக்க எண்ணினர். அதற்காக **கி.பி.** 1905 ஆம் ஆண்டு ஆங்கில அரசுப் பிரதிநிதியான கர்சன் பிரபு வங்காளத்தை இரண்டாகப் பிரித்தார். இதை எதிர்த்து அதே ஆண்டு சுதேச இயக்கம் துவங்கப்பட்டது. இதன் மூலம் அந்நியப் பொருட்கள் புறக்கணிக்கப்பட்டன.

SHUNMUGAM IAS STUDY CIRCLE